# ஞானசம்பந்தம்

மலர் 11] நந்தன ஞு சித்திரை மீ 10—5—52. [இதழ் 6



சண்பகாடவியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்.

## தருமபுர ஆதீனத்தில்.........

4—6—52 முதல் 13—6—52 வரை பத்து நாட்களும் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமிக்கு மஹோத்ஸவம் நடைபெறும்.

8—6—52 அன்று சகோபுர ரிஷபவாகனக்காட்சி. 10—6—52 அன்று திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம்; வெள்ளி ரதம். 12—6—52 அன்று திருத்தேர் விழாவும், 13—6—52 அன்று தீர்த்தப் பெருவிழாவும் நடைபெறும்.

ஆதீனஸ்தாபகர் குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜைவிழா 13—6—52 வெள்ளிக்கிழமை நடைபெறும். மறுநாள் 14—6—52 மாகேசுவர பூஜை, பட்டிணப் பிரவேசம் ஆகியன நிகழும்.

இத்திருநாட்களில் திருநெறியத் தெய்வத்தமிழ் மாநாடு நடத்த ஏற்பாடாகி இருக்கின்றது. பன்னிரு திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சங்க இலங்கியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், கீழ்க்கணக்கு நூல்கள், இலக்கண நூல்கள் ஆகியவைகளைப்பற்றிச் சிறந்த அறிஞர்பெருமக்கள் பலர் விரிவுரை நிகழ்த்துவார்கள். இவைகளோடு இசை நிகழ்ச்சிகளும், சிறு நாடகங்களும், கவியரங்கும் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வந்து கேட்டு இன்புறுவார்களாக.

1—6—52 அன்று தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் குருபூஜை விழா நடைபெறும், அன்று குருமூர்த்தத்தில் காலை மாலை விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சமயச் சொற்பொழிவுகளும் நிகழும்.

௨
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] நந்தன௵ சித்திரைமீ 10—5—52. [இதழ் 6

**பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.**

## உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்:
## சொல்லுவதெல்லாம் நல்லனசொல்லல்:

மனிதன் எப்பொழுதும் நல்லதையே நினைக்கவேண்டும். நல்லதையே சொல்லவேண்டும். அவனவனும் வாழ எண்ணலாம்; பிறர் அழிய எண்ணுதல் தவறு. நாம் வள்ளுவர் யுகத்தில் வாழ்கிறோம். வள்ளுவர் வாய்மொழிகளையே வாழ்க்கையின் சட்டமாகக் கொண்டு வாழ எண்ணுகின்றோம்; பேசுகின்றோம். அவர் என்ன சொல்லுகிறார்; தனக்கு வாழ்வு வேண்டுபவன் பிறர்க்கும் வாழ்வுவேண்டும் என்று எண்ண வேண்டுமாம். பழைய சமுதாயநிலை நமக்குத் தந்தவாழ்வு **வாழ்க வாழ்க** என்ற பாடல்கள். இன்றைய அரசியல் சூழல் நமக்குத்தந்தவாழ்வு அழிக ஒழிக என்றகோஷங்கள். மனிதன் எதை நினைக்கின்றானோ அதைச் சொல்லுகின்றான்; செய்கின்றான். அதனாலேயே அவனுக்கு அழிவும் ஆக்கமும் உண்டாகின்றன. எல்லோரும் வாழவேண்டும் நாமும் வாழ வேண்டுமென்று எண்ணினால் அதற்கு வழியுண்டு. எல்லாரும்

அழியவேண்டும்; நான் வாழவேண்டும்; என் இனம் வாழ வேண்டும் என்று எண்ணினுல் அவன் ஒருபோதும் வாழ முடியாது என்பது உறுதி.

பொள்ளாச்சியில் நகராண்மைக்கழக மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பேசிய அருளுரை இந்த உண்மையை எடுத்துக்காட்டி யிருக்கின்றது. அதனை நாம் மனமார வரவேற்கின்ருேம். ஒழிக என்று நாம் பிறனைச் சொல்லலாம்; நம்மை நாமே சொல்லிக்கொள்ளலாமா? ஒழிந்து எங்கேபோவது! போக இடமில்லாதபோது. இச்சொல்லுக்குப் பொருள்தான் ஏது? பயனற்றசொல்லைப் பேசுவது மக்கட் பண்பு ஆகுமா? "பயனில் சொல் பராட்டுவானை மகன் என்று சொல்லாதே" என்ற அளவில் வள்ளுவர் விட்டிருக்கிருரா? பதர் என்றல்லவா சொல்லியிருக்கின்ருர்! அந்தப்பட்டம் அறிவை நம்பிவாழ்கின்ற நமக்குத் தகுமா? ஆதலால் தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க! எல்லாரும் வாழ்க! என்ற எண்ணத் தோடு வாழ்க்கைச் சிகரத்தின் உச்சியில் வழியோடு ஏறுவோமாக.

---

## வாழ்த்து

**வித்துவான் திரு. மு. நடராஜதேசிகர் அவர்கள்,**

தமிழாசிரியர்

(திருவாவடுதுறை ஆதீன ஹைஸ்கூல், திருவிடைமருதூர்)

ஞானசம் பந்தமெனு நற்ருள் உலகமஞ்
ஞானசம் பந்தம் அகற்றியே—வானசம்
பந்த மருளி வளர்நந் தனவாண்டில்
எந்தையரு ளால்வாழ்க வே.

---

266

# கொங்குநாட்டில் ஆதீனப்பிரசாரம்.

**கோவைகிழார்.**

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தார் சைவப் பிரசார வேலையில் ஈடுபட்டிருக்கும் செய்தி சைவ உலகம் அறிந்ததே, இந்த ஆண்டுதான் அத்திருத்தொண்டு செய்யும் திருக்கூட்டத்தார் கொங்கு நாட்டிற்கு வந்து பிரசாரம் செய்தார்கள். அவர்கள் ஒரு பெரிய விசைவண்டியில் ஆதீனத்துப் பிரசுரங்களோடு ஒலிபெருக்கியும் வைத்துக்கொண்டு ஒரு ஓதுவாமூர்த்திகள், ஒரு சொற்பொழிவாளர், ஒரு தம்பிரான் சுவாமிகள் முதலியவர்களோடு விஜயம் செய்தார்கள், சொற்பொழிவாளர் சைவப் பிரசங்கத்திலும், சைவ ஒழுக்கத்திலும் சிறந்தவரான திரு, சமரபுரி முதலியாரவர்கள். திருக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து ஒழுங்கு செய்கிறவர்கள் தவத்திரு இராஜன் கட்டளை சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள். விசைவண்டிச் சாரதியே ஒலிபெருக்கியையும் ஒழுங்குபடுத்துவார். இந்தவகையில் எந்த இடத்திற்குச் சென்றாலும் வெகு சுலபத்தில் பிரசாரக் கூட்டங்களை ஏற்படுத்தி, சொற்பொழிவுகளை நிகழ்த்திவைக்க முடியும். இதேமுறைதான் கொங்கு நாட்டிலும் நடைபெற்றது.

திருக்கூட்டத்தார் கொங்குநாட்டில் முதல்முதல் சென்றது திருச்செங்கோடு ஆகும். அந்த மாதிருக்கும் பாதியன் வீற்றிருக்கும் திருத்தலத்தைவிட்டுத் திருநணா என்னும் பவானிக் கூடலுக்குச் சென்று, பிறகு திருமுருகன்பூண்டி, அவிநாசி என்ற தலங்களை அடைந்து, சொற்பொழிவுகளை நிகழ்த்திவிட்டுப் பங்குனி உத்திரத் திருவிழாவன்று பட்டிப்பெருமான், திருநடனக்காட்சி காணவந்தார்கள். அன்று மாலை திருக்கோயிலில் குன்றக்குடி சந்நிதானத்தின் தலைமையில் நடந்த திருக்கோயில் சமயப் பிரசங்கங்களில் கலந்துகொண்டார்கள். அதுமுதல் அந்தத் திருக்கூட்டத்தில் சேர்ந்து உழைக்கும் பெருமை அடியேனுக்கும் கிடைத்தது, கோவையிலும் கோவையைச் சுற்றிலுமுள்ள இடங்களிலும் மூன்று நாட்கள் பிரசார வேலை நடைபெற்றது. அவைகளிலே இராமகிருஷ்ண வித்தியாலயம், ஞானம்பிகை நூற்சாலை, இரத்தின விநாயகர் ஆலயம்,

இராமநாதபுரம் சன்மார்க்க சங்கம், கௌமார மடாலயம் முதலியவை சிறந்தவை,

பிறகு கோவையைவிட்டுக் கிழக்கே நொய்யலாற்றின் பள்ளத்தாக்கின் வழியாகப் பல இடங்களிலும் பிரசாரம் செய்துவிட்டு இறுதியில் திருப்பாண்டிக் கொடுமுடி சென்று, திருக்கூட்டத்தார் திருச்சி சென்றார்கள், இந்தத் திருத் தொண்டில், சொற்பொழிவுகள் மட்டுமேயன்றிப் பாடசாலை களுக்குச் சைவநூல்களும் இலவசமாகக் கொடுக்கப்பட்டன, அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலையங்கள்:—சூலூர், பல்லடம், திருப்பூர், காங்கயம், சிவன்மலை, சென்னிமலை, சிவகிரி முதலியன. சொற்பொழிவு நிகழ்த்திய இடங்கள்:—திருப்பூர்ச் சிவாலயம், காங்கயம் மெய்கண்டார்சபை, சென்னிமலை கைலாயநாதர் கோயில், சிவகிரி வேலாயுதசுவாமி கோயில், கொடுமுடி மகுடே சுவரர் கோயில் என்பன, பார்த்துப் படம் எடுத்த இடங்கள் பெரியபாளையம், குரக்குத்தளி சுக்ரீசுவரர் கோயில், சிவன்மலை ஆண்டவர் கோயில், விஜயமங்கலம், திங்களூர், சீனுபுரம் கோயில்கள் என்பன, யாதொரு சிரமமுமின்றிக் கடுமையான வெய்யிலில் பிரயாணம் செய்து ஒருதினமும் தவருமல் நாள் தோறும் இரண்டு பிரசங்கங்களும் செய்து திருத்தொண்டு ஆற்றினதை எவரே புகழாதார்?

அவ்வாறு பிரசாரம் செய்ததில் சைவசம்பந்தமான அருமை பெற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டன, அவைகளும் சிவனடி யார் வரலாற்றுப் பகுதிகளிலிருந்து விளக்கப்பட்டன, சில இடங்களில் பொதுமக்களுடைய ஐயங்களும் தீர்க்கப்பட்டன, பொதுவாக இவ்விதப் பிரசாரத்தினுல் மக்கள் பலன் அடையக் கூடும். இனி, சில இடங்களின் பெருமைகளைச் சிறிது விளக்கு வோம்.

**பெரியபாளையம்** என்ற ஊர் திருப்பூருக்குக்கிழக்கே ஆறு கல்லில் உள்ளது. அங்கே நள்ளாறுபாயும்படியான நஞ்சராயன் குளத்தின் அருகிலே செழிப்பான வயல்களின் இடையே **குரக்குத்தளி** என்கிற வைப்புஸ்தலம் ஒன்று அமைந்திருக்கிறது. அதனைச் சுந்தரமூர்த்திகள், "கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்" என்று அருளிச்செய்திருக்கிறுர். அக்கோயிலின்

268

இரண்டுகாட்சிகள் படம்பிடிக்கப்பட்டன. சுக்ரீவனுல் பூஜிக்கப் பட்ட இடமாதலால் சுவாமியின் பெயர் 'சுக்ரீவீசர்' என்பது. இதற்குச் சிறுதொலைவில் உள்ள சேவூர் என்ற ஒரு வைப்புஸ் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான் வாலியால் பூஜிக்கப் பட்டபடியால் 'வாலீசர்' என்றபெயர் பெறுகிருர்.

**சிவன்மலை:-** இது முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஒரு அழகிய குன்று. இக்குன்று திருப்பூரிலிருந்து காங்கயம் செல்லும் வழியிலிருக்கிறது. இது பண்டைக்காலத்தில் மிகச் சிறப்புப்பெற்று விளங்கியிருந்தது. அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ் உண்டு. அக்காலத்தில் இக்கோயில் உள்ள ஊருக்கு 'பட்டாலியூர்' என்று பெயர். இதைச்சுற்றிலும் இதற் கடுத்த படியூரிலும் விலையுயர்ந்தகற்கள் கிடைத்தனவாம். இப் போதும் வைரச்சாணைபிடிக்கும் குருந்தக்கல் கிடைக்கிறது. மலையின் சரியானபெயர் 'சேய்மலை' என்பது. சேய் என்ருல் முருகன். இன்றைக்கும் பாமரர்கள் சேமலை என்றுதான் கூறுகிருர்கள். அடுத்து மூன்று கல்லிலுள்ள காங்கயம் என்ற காங்கேயம் கொங்குநாட்டிற்குக் கால்நடைச் செழிப்புப் பெருமைதரும் நடுநிலைய ஊர். இவ்வூரில் ஒரு அருமையான சிவாலயம் உண்டு. சிவமலையில் அருமையான படித்திருப்பணி செய்யப்பட்டிருக்கின்றது. படிக்காட்சியும், விமானக்காட்சியும் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

**சென்னிமலை:-** இது ஒரு முருகப்பெருமான் குன்றுதோரு டல் தலம். ஈங்கூர் நிலையத்திற்கு நான்கு கல்லில் உள்ளது, திருப்புகழ் உண்டு. காளமேகப் புலவர் வசைபாடியிருக்கின்ருர். ஊர் நடுவில் கைலாயநாதர் கோவிலும், மலைஉச்சியில் முருகப் பெருமான் ஆலயமும் உண்டு. நல்லபடிகள் உண்டு. எளிதில் ஏறலாம். இவ்வூருக்கு வடக்கே சிறிது தொலைவில் பெருந்துறை யில் 'கழிவுநோய் மருத்துவ நிலையம்' இருக்கின்றது. அதற்கு மேற்கே விஜயமங்கலம் என்ற பண்டைய ஊர் உண்டு. இதில் இரண்டு சிவாலயங்கள் இருக்கின்றன. மற்றும் திங்களூர், சீனபுரம் என்ற ஊர்களில் சிவாலயமும், முருகன் குன்றும் இருக்கின்றன. இம்மூன்று ஊர்களிலும் பண்டைக்காலத்தில் சமணர் ஆதிக்கம் இருந்தது. விஜயமங்கலத்தில் கொங்குவேள் 'பெருங்கதை' எழுதினுர். சீனபுரத்தில் நன்னூல் இயற்றிய

269



பவணந்தி முனிவர் உதித்தார். இம்மூன்று ஊர்களின் ஆலயப் படங்களும் பிடிக்கப்பட்டன.

**சிவகிரி:—** இது சென்னிமலையிலிருந்து கொடுமுடிக்குப் போகும் வழியில் உள்ள ஊர். நெசவுத்தொழில் மிகுதி. ஊர் நடுவில் சிறந்த ஆலயம் இருக்கின்றது. கோயிலில் வேலாயுத சுவாமி எழுந்தருளியிருக்கின்றார். நிலமட்டமான பெரிய பாறையில் கோயில் கட்டப்பட்டுள்ளது. அப்பாறையிலேயே சரவணப் பொய்கை இருக்கின்றது. பாறையின்மீது கட்டப் பட்டதால் "கிரி" என்ற அடைமொழி வந்ததாம். இதுவும் சேய்கிரி என்று இருக்கலாமோ என்ற ஐயம் வருகிறது. இவ்வூருக்கு $1\frac{1}{2}$மைல் கிழக்கே முதலிப்பாளையம் என்ற ஊரில் ஒரு பண்டைய பெரியகோயில் இருக்கின்றது, இங்கே நஞ்சையப் புலவர் என்ற ஒரு பண்டைப்புலவர் இருந்து பல நூல்களை முன்னாளில் இயற்றியிருக்கின்றார்.

கொங்குநாட்டில் 36 ஆலயங்கள் உள்ளன. புது ஆலயங்கள் பலவும் உள்ளன. திருக்கூட்டத்தார் பின்னாளிலே இவைகளுக் கெல்லாம் விஜயம்செய்து சமயப் பிரசாரம் ஆற்றுவார்களாக.

---


## திருக்குறள் - உரைவளம் : பொருட்பால்

அறத்துப்பாலைப்போலவே உரைப்பகுதி, உரைவிளக்கப் பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி இவைகள் அடங் கியன. *M. O.* மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும். (கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள்.)

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0.

தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமபுரம், மாயூரம் P. O.

220.

# தருமைத் திருப்பணி

### கோவைகிழார் இயற்றியது.

தருமை மடத்துச் சமயக் கூட்டம்
அருமைப் பணியை ஆற்ற எண்ணி
இருமை உற்ற எங்கள் நாட்டில்
ஒருமை மனத்தில் உதவ வந்தார்.

வேண்டிற் றெல்லாம் விரைவுச் சகட்டில்
தூண்டில் நிலையில் தோற்றச் செய்து
காண்டி என்னக் கவினுர் முறையில்
நீண்ட பயண நெறியில் வருவார்.

கோயில் கழகம் குடிகள் இருப்பின்
வாயில் வெளியில் வாய்ப்பைத் தெரிந்து
தாயின் சேயின் தமரின் நின்ற
நோயின் நீக்கம் நுழையத் தருவார்.

சமயப் பேச்சைச் சமர புரியார்
இமயம் போன்ற ஏற்ற வகையில்
அமயம் கண்டே ஆற்ற லுடனே
கமயம் நிரம்ப கடிதே செய்வார்.

அருட்டம் பிராணுர் அரும்பேச் சுகளின்
பொருட்டுப் பின்னர் பொன்சொல் நிகழ்த்தக்
குருட்டு மக்கள் கூட அறிய
உருட்டித் தருவார் ஊரார் மகிழ.

இந்த முறையில் எழில்ப்ர சாரம்
விந்தை யாக வியன்பூ மியிலே
எந்த மடத்தார் இதுநாள் செய்தார்?
சிந்தை செய்து செப்பித் தருமின்.

நந்தன ஆண்டு நகைமுகம் பொலிய
வந்தெமை ஆண்டு வளமுடன் திகழ
எந்தமர் மக்கள் எழிற்சிவ மதனை
சிந்தையில் வைக்கும் சீர்தரு குகவே
தருமையா மடத்துத் தனித்திருக் கூட்டம்
அருமையில் பலநாள் ஆற்றிடும் சேவை
பெருமையில் செழிக்கப் பெண்களோ டாண்கள்
ஒருமையில் சைவத் தோங்குக அருளில்
கரவரு டத்தின் கடைசியில் பன்னாள்
பரவிய நலத்துப் பண்பில் மிளிர
குரவரும் சீடர் கூடிய குழுவின்
மரபினில் மிளிர மலிந்தது அன்பே
அவ்வகைச் சமயத் தடிப்படைப் பரப்பு
செவ்வகை யாகச் செழிக்க இன்றே
திவ்விய ஆண்டின் சித்திரை பிறக்க
பவ்விய முறைகள் பரந்திடும் என்க
ஐந்தெழுத் தின்றே அகமகிழ்ந் திசைக்க
மைந்தரும் மகளிர் மற்றவர் எல்லாம்
உய்ந்தெழுந் தோங்க உலகெலாம் புரக்கும்
ஐந்திரு முகவன் ஆணையும் ஓங்கும்
சேய்மலைக் குகனைச் சித்திரைத் திங்கள்
வாய்மையில் முதல்நாள் வழிபடும் அதனால்
நோய்மையும் தீங்கும் நுழைந்திடா வண்ணம்
போய்மகிழ்ந் தேத்திப் போந்தனம் யாமே
தருமையா மடத்தார் தந்தருள் ஊர்தி
அருமையில் எம்மை அரும்பிர சாரப்
பெருமையில் செய்ய பெருந்தளி களையும்
உரிமையில் காண உதவிய தன்றே
எம்மிடை நன்றி இதயமும் பொங்க
இம்மெனு முள்ளம் எழும்பித் ததும்பிடும்
செம்மையில் தருமைத் திவ்விய மடத்தார்க்
கிம்மையும் பின்பும் இயற்றிடும் என்றும்.

# தருமபுர ஆதீனப் பிரசாரம்

## கோவைஜில்லாவில் நிகழ்ந்தவை.

(சென்றமாதத் தொடர்ச்சி)

5—4—52 ஈரோடு சிவன்கோயில் திருமுறைக்கழகம். இரவு 8-மணி முதல், கலைமகள் கல்விநிலைய உரிமையாளர், திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B. A., L. T., தலைமையில். திரு. பூ. சமரபுரி முதலியார் 'ஞான வழிபாடு' என்பதுபற்றியும், ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள் 'பாசநீக்கமும்கடவுட் பேறும்' என்பது பற்றியும் பேசினார்கள்

6—4—52 சேலம் காலை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையிலும், மாலை ஜில்லா நீதிபதி. திரு. S. நடராஜ நாடார் B. A., B. L., தலைமையிலும் பிரம்மஞானசபை மண்டபத்தில் திருமுறை திவ்யப்பிரபந்த மாநாடு நடைபெற்றது. 8-மணிக்குத் திருமுறை திவ்யப்பிரபந்த ஊர்வலம். திரு உ. வே சீநிவாஸாசாரியார் 'ஆழ்வார்களின் பெருமை' திரு பூ சமரபுரி முதலியார் 'திருவாசகம்' திருமதி வேதவல்லி அம்மாள் 'திருப்பாணாழ்வார்' ஸ்ரீ சுப்பிரமணிய குருக்கள் 'சிவாகமம்' திருமதி லக்ஷ்மி அம்மாள் 'பிரபந்த சாரம்' திருமதி அ. கு. காமாட்சி அம்மையார் M. A. 'நால்வர் காட்டிய நல்வழி', திரு. நரசிம்மாசாரியார் B. A., B. L. 'திவ்யப்பிரபந்தம்' திருமதி புஷ்பம் நடராஜன் 'மாணிக்கவாசகர்'.

7—4—52 அவிநாசி சிவன் கோயில் மாலை 3-மணி முதல். திரு பூ. சமரபுரி முதலியார், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சுந்தரர் வரலாற்று நலன்',

8—4—52 பேரூர் மாலையில் திரு. பூ சமரபுரி முதலியார் 'அருந்துணையும் பெருந்துணையும்' ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சமய ஆராய்ச்சி முறையும், பெரியபுராண நாயன்மார் அருள் வாழ்க்கைச் சிறப்பும்' குன்றக்குடி ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள். தேவஸ்தான வித்துவான்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

273



9—4—52 ஷையூர் ஸ்ரீ சுப்பையாகவுண்டர் ஞானப்பிகை யில். மாலை 4-மணி முதல் திரு. பூ. சமரபுரி முதலியார் 'அன்பும் அருளும்' திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் B A.,B L., அவர்களும், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் சமயக்கருத்துக்களை விளக்கினார்கள்.

ஷையூர் R. S Puram விநாயகர் கோயில். இரவு 7½-மணி முதல். திரு. பூ. சமரபுரிமுதலியார் 'விநாயகர் தத்துவம்' ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் 'திருவடி ஞானம்'.

10—4—52 ஷையூர் ஸ்ரீவித்யாலயம், மாலை 5-மணிமுதல். திரு. பூ. சமரபுரி முதலியார் 'அப்பர் அன்பு வாழ்க்கை' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'அப்பர் அருள் நிலை',

ஷையூரின் பக்கம் இராமநாதபுரம் பெருமாள் கோயில், இரவு 9-மணி முதல். திரு. பூ. சமரபுரி முதலியார் 'ஆண்டாள்' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'அடியார்கள் ஆழ்வார்களின் அருள்நிலை'.

11—4—52 கோவை வரசித்திவிநாயகர் மடாலயம் பகல் 12-மணிமுதல். திரு. பூ சமரபுரி முதலியார் 'காரைக்கால் அம்மையார்'. அன்று அம்மையார் குருபூஜைத்திருநாள்

ஷையூர் சிரவணம்பட்டி கௌமாரமடாலயம். மாலை 4-மணி முதல் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில். வித்துவான். ஸ்ரீ இராமசாமி ஐயா வரவேற்புரை கூறினர். கோவை A. C. திரு. சண்முக சுந்தரம் பிள்ளை ஆதீனப் பிரசாரக் கோஷ்டியைப் பாராட்டினர். திரு. பூ சமரபுரி முதலியார் 'திருப்போரூர் சந்நிதி முறை' திருமதி குழந்தையம்மாள் 'திருவாசகம்' கௌமாரமடத்துப்புலவர் திரு சுந்தரம் பிள்ளை நன்றியுரை கூறினர்கள்.

12—4—52 திருப்பூர் சிவன்கோயிலில். அன்புநெறிக் கழகச்சார்பில். மாலை 6-மணிமுதல், திரு. பூ. சமரபுரிமுதலியார் 'இளையான்குடி மாறர்' திரு. C. M. இராமச்சந்திரன்செட்டியார் B.A.,B.L., 'சைவசமயம்'. திரு. பழனிச்சாமிப் புலவர் 'முருகன் பெருமை'.

274

13—4—52 காங்கயம் மெய்கண்டார் கழகம். மாலை 4-மணிமுதல், திரு. பூ சமரபுரி முதலியார் 'மெய்கண்டார் வரலாறு' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'கடவுள் வழிபாடு' திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் B A.,B.L., 'நாயன்மார்களின் அருள் வாழ்வு'.

சென்னிமலை கலாஞானசங்கத்தில் இரவு 9-மணிமுதல் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு பூ. சமரபுரி முதலியார் 'அப்பூதியடிகள்' திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் B. A., B. L., 'சைவசமயம்' திரு. தேவ சேனாதிபதி குருக்கள் 'சுந்தரர்' திரு. தெய்வசிகாமணி குருக்கள் 'திருஞானசம்பந்தர்'.

14—4—52 சிவகிரி மாலை 4-மணி முதல். திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் 'திருஞானசம்பந்தர்' திரு. பூ. சமரபுரி முதலியார் 'கடவுள் உண்மை'. அப்பூதியடிகள் சைவ சித்தாந்தசபை நிறுவப்பெற்றது. சபைக்கு ஆதீனவெளியீடு களும் கொடுக்கப்பட்டன.

கொடுமுடி 7½மணிமுதல் திருமதி முத்துலட்சுமி யம்மையார் 'பஞ்சாக்கரவிளக்கம்' திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் B. A., B. L., 'சமயவளர்ச்சித் திட்டம்' திரு. பூ. சமரபுரிமுதலியார் 'சுந்தரர் வாழ்க்கை' திரு. சொக்கலிங்க கவுண்டர் 'கழகத்தின் அவசியம்'. இங்கு மெய்கண்டார் திருப் பெயரால் ஒருகழகமும் கோயிலில் புத்தகநிலையமும் ஸ்தாபிக்கப் பெற்றன.

15—4—52 கரூர் ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயம். மாலை 7-மணிமுதல். திரு பூ. சமரபுரி முதலியார் 'எறிபத்த நாயனார்' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'இறைபணி'

16—4—52 கடம்பர் கோயில் சிவன் கோயில். மாலை 5-மணி முதல், திரு பூ. சமரபுரிமுதலியார் 'சமயக்கருத்துக்கள்'

குளித்தலை அக்கிரகாரம். இரவு 8-மணி முதல் பிர்மஸ்ரீ. அரங்கசாமி ஐயங்கார் தலைமையில் திருமுறை திவ்யப்பிரபந்த மாநாடு நடைபெற்றது. திரு. பூ. சமரபுரி முதலியார் 'நாலாயிர பிரபந்த ஆராய்ச்சி' திரு. ராகவாசாரியார் 'வைஷ்ணவம்' வித்துவான், திரு. ஜம்புலிங்க குருக்கள் 'சைவசமயம்' திரு, அரங்கசாமி ஐயர் 'வேத சிவாகமம்' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சமய ஒற்றுமை'.

17—4—52 திருப்பராய்த்துறை, சிவன்கோயில். மாலை 6 மணி முதல், திரு. பூ. சமரபுரி முதலியார் 'மணிவாசகர்' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'அருட்குரு' ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் 'ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர்'.

ஜீயர்புரம், அம்மங்குடி பெருமாள்கோயில், இரவு 8 மணி முதல். திரு. M. S. இராமசாமி ஐயர் அவர்கள் M. A. L. T. தலைமையில், சிவஸ்ரீ K. அரங்கசாமி ஐயர் 'சைவம் வைஷ்ணவம்', திரு. பூ. சமரபுரி முதலியார் 'முருகன் பெருமை' விஷா ராஜா துரைசாமி ஐயர் 'சமயக்கல்வி' ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சமயப்பிரசாரம்'.

18—4—52 பழநி பழனியாண்டவர் சந்நிதி, இரவு 8 மணி முதல், திரு. பூ. சமரபுரி முதலியார் 'திருமுருகாற்றுப்படை'.

19, 20, 21—4—52 பொள்ளாச்சி. இம்மூன்று நாட்களிலும் திரு. பூ. சமரபுரி முதலியார் முறையே 'திருமுறை விளக்கம்', 'காரைக்காலம்மையார் வரலாறு' 'திருநாவுக்கரசர் வரலாறு' ஆகியபொருள்கள்பற்றிப் பேசினார்கள். 20—4—52-ல் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் விருதுநகர் தெய்வ நெறிக் கழக ஆண்டுவிழாவிலும், திருநாவுக்கரசர் சதயநாள் விழாவிலும் கலந்துகொண்டு தலைமைவகித்துச் சிறப்பித்தார்கள்.

22—4—52 திண்டுக்கல். ஸ்ரீ அபிராமியம்மன் கோயில். திரு. பூ சமரபுரி முதலியார் 'அபிராமி அந்தாதி', ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள்' 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்'.

23—4—52 குன்றக்குடி. மாலை 5-மணி முதல், வித்வான் திரு. S. தண்டபாணி 'சமயப்பிரசாரத்தின் அவசியம்', திரு. குஞ்சிதபாதம் பிள்ளை 'மெய்ப்பொருள் நாயனர்', திரு. பூ. சமரபுரி முதலியார் 'முருகன் வழிபாடும் சமயவாழ்க்கையும்', தேவஸ்தான சூபரிண்டெண்டு திரு. சுந்தரம் பிள்ளை 'நமது கடமையும் முருகன் பெருமையும்'.

24—4—52 புதுக்கோட்டை ஸ்ரீ சங்கராலயத்தில் சைவ வைணவ மாநாடு நடைபெற்றது. பண்டித ஸ்ரீ நா. கனகராஜ ஐயர் B. O. L., 'அரிஹர ஒருமை' பிர்மஸ்ரீ A. ஸ்ரீநிவாச ராகவன் M. A., 'ஆழ்வார் அருண்மொழி' பிர்மஸ்ரீ R. ஸ்ரீநிவாஸா சாரியார் B. A. B. L., 'ராமாநுஜ சித்தாந்தம்', திரு. பூ. சமரபுரி முதலியார் 'சைவத் திருமுறைக்கருத்து', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சைவநெறியுண்மை'.

25—4—52 திருச்சி மலைக்கோவிலில் திருமுறை மாநாடு நடைபெற்றது. ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமை வகித்தார்கள். நகரமன்ற ஆணையாளர் திரு. சி. ராமலிங்க முதலியார் அவர்கள் M. A. திறப்புரை மொழிந்து திருவாசகத்தின் பெருமையினையும் எடுத்து விளக்கினார்கள். வித்துவான், ஸ்ரீமத் மௌன இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் 'சம்பந்தர் தேவாரம்', திரு. பூ. சமரபுரி முதலியார் 'அப்பர் தேவாரம்' வித்துவான். திரு பஞ்சாதம் பிள்ளை '7-9 திருமுறைகள்'. வித்துவான், திரு தி. பட்டுச்சாமி ஓதுவார் '11-ம் திருமுறை'. தலைவர், 'திருமந்திரம்'. வித்துவான் திரு. பரிமணம் பிள்ளை, வித்துவான், திரு. இரத்தினம்பிள்ளை, திரு. வே முத்துசாமிபிள்ளை திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L., ஆகியோர் 'பெரிய புராணம்'.

26—4—52 கும்பகோணம் ஆதிகும்பேசுவரர்கோயில். மாலை 6மணி முதல். திரு. P. T. S. குமாரசாமிச்செட்டியார் தலைமையில். ஸ்ரீலஸ்ரீ மீநாட்சிசுந்தரதேசிக சுவாமிகள் 'சிவநெறிப் பிரகாசஉரை'. திரு. பூ. சமரபுரி முதலியார் 'சைவசமயஉண்மை' ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் 'சித்தாந்தஉண்மை'

277

27—4—52. திருவாரூர் விஜயபுரம் ரேணுகாதேவியம்மன் கோயில். மாலை 4-மணி முதல் திரு. பூ. சமரபுரி முதலியார் 'சைவப்பெண்மணிகள்' ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் 'உமாதேவி'.

ஷை ஊர் இரவு 6மணி முதல் கோயில் ஆயிரக்கால் மண்டபம் திரு.பூ. சமரபுரிமுதலியார் 'திலகவதியார்', ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'முப்பெண்மணிகள்'. ஆஸ்திக சங்கச் சார்பில் ஆதீனப் பிரசாரத்திற்குப் பாராட்டும் நிகழ்ந்தது.

இவ்வாறு சொற்பொழிவுகள் நிகழ்த்தியபோது சிற்சில இடங்களில் பிரசங்கம் தொடர்ந்து நடைபெற நகரவாசிகளின் விருப்பப்படி, சில கழகங்களும் நிறுவப்பெற்றன. ஆங்காங்கும் ஆதீனவெளியீடுகளும் அன்பர்களுக்குவழங்கப்பட்டன. ஆதீனப் பிரசாரகரேயன்றி ஆங்காங்குள்ள அறிஞர்களும் பிரசாரத்தில் கலந்துகொண்டு பணி புரிந்ததும் பாராட்டற்குரியது இவை களோடு பிரசாரம் நடக்குமிடமெல்லாம் ஆங்காங்குள்ள ஆலய நிர்வாகிகளும், ஏனைய பெருமக்களும் வரவேற்று உபசரித்துச் சிறப்பித்தது பிரசாரகோஷ்டிக்கு மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் அளித்தது. இச்சுற்றுப்பிரயாணத் திட்டத்தில் சுமார் ஐம்பது இடங்களில் பிரசாரம் நடந்துள்ளது.

---


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

278

# தொனிப்பகுதி.

வித்வான் திரு, K. S. விஸ்வநாத சாஸ்திரிகள் P. O. L.
S. V. O. கல்லூரி, திருப்பதி.

(தொடர்ச்சி)

## சொல்லாற்றலால்தோன்றுந்தொனியும்சிலேடையும்

செம்பொருட்குப்பின் குறிப்புப் பொருளொன்று சொல்லாற்றலால் தோன்ற அஃதும் தொனிவகையாகுமானால் சிலேடைக்கே இடமின்றாம் என்று தோன்றும். சிலேடைக்குரிய இடம் வேறு; தொனிக்குரிய இடம் வேறு. தொடர்ப் பொருளாகச் செம்பொருள் இரண்டுடையதாவது சிலேடை. இதன் மேலும் அணியொன்று குறிப்பால் தோன்றுவது தொனி வகையுள் ஒன்று,

'செங்கரங்களானிரவு நீக்கும்' என்றால் இது சோழனுக்கும் ஞாயிற்றிற்கும் சிலேடையாகிச் சிவந்த கைகளால் இரவலரது இரப்பை ஒழிக்கும் எனவும், செங்கதிர்களால் இருளை நீக்கும் எனவும் இரண்டு சொற்றொடர்ப் பொருள்களாகிய செம் பொருள்களே உடையதா யமைகின்றது. இத்தகையன சிலேடைக் குரியனவே, இவ்விடங்களில் பிற அணிகளுங்கூட வெளிப்படையாக அமைந்திருப்பதும் உண்டு. அவைகளும் சிலேடைக் குரியனவே. தொனி என்று ஒன்றைக் கொள்ள வேண்டுமானால் அது செம்பொருளின் வேறாயதொரு குறிப்புப் பொருளாக ஆதல் வேண்டும்.

'விச்சாதரனேனுமந்தரத்து மேவான்' என்றால் எங்கோ விச்சாதரனென்ற தேவசாதியினனானாலும் வானுலகில் இரான் என்றும், விச்சையை உடையவன் கேட்டின்கண் செல்லான் என்றும் இரண்டு சொற்றொடர்ப் பொருள்கள் செம்பொருளாக அமைய விரோதவணியும் வெளிப்படையாகவே காணப் படுகின்றது, இதனுள் 'எனினும்' என்பது ஏனுமென்று மருவி நின்று விரோதத்தை வெளிப்படுப்பதாயிற்று. இவ்விரோதத் திற்குத் துணைசெய்வதாகவே சிலேடையும் அமைகின்றது, இவ் வியல்புடையவைகளும் சிலேடைக் குரியனவே; தொனியாகா,

இவ்வாறன்றி, குறிப்பால் கொள்ளப்படுகிற அணி ஒன்று எவ்வகையிலும் சொல்லால் புலப்படுவதாவதே இத்தொனிவகையைச் சார்ந்ததாம், எவ்வகையிலேனும் ஒருசிறிது வெளிப்படுவதாகுமானாலும் அது தொனியென்று கொள்ளப்படாது.

## சொல்லாற்றலால் தோன்றுந் தொனி.

திறம்படத் தோன்றுகின்ற அணியொன்று குறிப்புப் பொருளாயமைய, அஃதும் சொல்லாற்றலால் பெறப்படுவதாகுமானல், அஃதே சொல்லாற்றலால் தோன்றும் தொனி என்று கொள்ளப்படுகின்றது.

'தாரிலங்கு மறைமுடிவில் நடித்தருளும் அருணேசர் தமது நாட்டில், நாரியர்மேல் மனமகிழும் அளியினங்காள்! ஒரு வார்த்தை நவிலக் கேளீர், ஏரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க நீரிருக்கு மிடங்கடோறும், வேரிமலர்த் தேனிருக்க இவர்கூழை விரும்பிவந்தேன் விழுகின்றீரே'

என்று ஒருதலைவன் கூறுகின்முன், 'வண்டோச்சி மருங்கணைதல்' என்னும் அகப்பொருட்டுறைக்குரிய இலக்கியம் இது. இதனுள் வரும் 'சோறு' என்னும் சொற்குத் தாழம்பூவிலுள்ள பராகத் திரள் என்றும் பொருள். 'இச்சோறும் வேரிமலர்த் தேனும் நீங்கள் இருக்கு மிடங்களிலேயே இருக்கும்போது இத்தலைவியின் கூந்தலில்வந்து விழுவது தக்கதன்று' என்று வண்டை நோக்கித் தலைவன் கூறுவதாகச் செம்பொருள் ஒன்று தோன்றுகின்றது. அன்றியும் 'இருக்கு மிடங்களிலேயே சோறும் நீரும் தேனும் கூட இருக்கும்போது பிறர் கூழை விரும்பி வந்து விழுவது தக்கதன்று' என்பதுங்கூடச் செம்பொருளாகவே காணப்படுகின்றது, இரண்டாவதாகத் தோன்றுகின்ற இது தொடர்பிலதாம் தொடர்பில கூறுவது குற்றமாம். இக்குற்றத்திற்கு இது இடமாகாததாக வேண்டுமானல் இங்கு உவமை காண்டல் இன்றியமையாததாகின்றது, 'இருக்கு மிடங்களிலேயே சோறும் நீரும் தேனுங்கூட இருக்கப் பிறருடைய கூழை விரும்பி வந்து விழுவார்போல, இவ்வண்டுகளும் உள்ள இடங்களிலேயே கைதையெலாஞ் சோறும் வேரிமலர்த் தேனுமிருக்க இத்தலைவியின் கூந்தலில் வந்து விழுகின்றனவே இது தக்கதன்று' என்று கொண்டபின்னரே அமைதியுடையதாகின்றது, ஆகவே உவமையணி ஒன்று குறிப்பால் பெறப்படுவதாக, அஃதும் சொல்லாற்றலாலேயே பெறப்படுவதுமாயிற்று. (வரும்)

 280

## ஆதீன தேவஸ்தானங்களில் ... ...

# தேவாரவகுப்பு ஆண்டுவிழா.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் தேவாரவகுப்பு ஆண்டு விழா 3—5—52 மாலை 4-30 மணிக்குக் கோயில் பிரசார மண்டபத்தில் நடைபெற்றது. கேட்போருக்கு வசதியாக ஒலிபெருக்கியும் அமைக்கப்பெற்றிருந்தது. தேவார வகுப்பு மாணவிகள் திருமுறைப் பாடல்களை இசையுடன் பாடினர்.

தஞ்சை ஹுஜூர் சிரஸ்த்தார் உயர்திருவாளர் S. இராமச்சந்திரபத்தர் அவர்கள். B. A. விழாவிற்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்ததோடு "அப்பர் தேவாரம்" என்னும் பொருள்பற்றி அரியதோர் சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள். தேவாரவகுப்பு மாணவிகளுள் நன்கு இசையுடன்பாடிய இருபத்தைந்து மாணவிகளுக்கும் பரிசுப்பொருளாகப் பலவித சாமான்கள் வாங்கி ஒவ்வொன்றிலும் மிட்டாய்களை நிரப்பிப் பரிசு வழங்கப்பட்டது. பரிசுகளையெல்லாம் விழாத்தலைவர் அவர்களே வழங்கினார்கள். பிறகு தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்வான். M. ஆறுமுக தேசிகர் அவர்கள், தேவஸ்தானச்சார்பில் தலைவர் உள்ளிட்ட அனைவர்க்கும் நன்றிதெரிவித்துக்கொண்டதோடு, மாணவிகளுக்கு அவ்வப்போது அருளும் பொருளும் வழங்கி ஊக்கமளித்து வருகின்ற ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கும் மூலதனம் ஏற்படுத்தி அதன் வட்டித் தொகையைக் கொண்டு நிரந்தரமாகப் பரிசுகளை மாணவர்களுக்கு அளித்து வருகின்ற திருவாளர் துரைசாமிப்பிள்ளை அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். பிறகு தேவாரவகுப்பு ஆசிரியர் கடவுள்வாழ்த்துப் பாட 6½-மணிக்கு விழா இனிது முடிந்தது.

பிறகு 7-மணிக்கு பாணிமீது திருமுறைகளை எழுந்தருளச்செய்து அலங்காரம் செய்யப்பெற்றது. ஊர்வலம் தொடங்கிற்று. தேவஸ்தானத்தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவிகள் ஆதீனப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் தக்க இன்னிசைக் கருவிகளின் துணை கொண்டு திருமுறைஓதிவர இரவு10½மணிக்கு, திருமுறை ஊர்வலம் இனிது நிறைவுற்றது. பெருமக்கள் பலர் கேட்டும் தரிசித்தும் இன்புற்றனர்.

மூற்பகல் 10-மணிக்கு, சமயாசாரிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

---

## மண்டலாபிஷேக லக்ஷார்ச்சனை.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 9—4—52 புதன்கிழமை பகல் 11 மணிக்கு ஸ்ரீ பிரமபுரீசுவரர், திருநிலைநாயகி, திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும் பரிவாரங்களுக்கும் மண்டலாபிஷேகமும், மாலை 6 மணிக்கு ஸ்ரீ அம்பாள் சம்பந்தருக்குச் சந்தனக்காப்பு அலங்காரமும், ஸ்ரீபிரமபுரீசுவரசுவாமிக்கும், திருஞானசம்பந்தமூர்த்திக்கும் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ திருநிலைநாயகிக்கு நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன.

அன்று லக்ஷார்ச்சனை பூர்த்தியும் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு, திருஞானசம்பந்தசுவாமி கோயிலில், தேவஸ்தானக் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளும், ஆதீனப்பாடசாலை ஆசிரியர் சிவாகம வித்துவான் பிரம்மஸ்ரீ சுவாமிநாதசிவாசாரியார் அவர்களும் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இரவு திருவீதி உலாக்காட்சியும் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் அன்று விஜயமாகித் தரிசனம் செய்தருளினார்கள்.

# ஸ்ரீ காசிமடத்தின் தருமம்.

## ஸ்ரீ காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு முதற்பொருள் ரூ. 5000.

கமலை எனப்பெற்ற திருவாரூரில்திருவவதாரஞ்செய்தவரும் திருவாரூரில் எம்பெருமான் நடனத்தின்போது படுதண்டுமுறிய அப்படுதண்டு கூடுமாறு பாடியும், திருமறைக்காட்டில் ஓரந்தணனது குட்டநோய் தீரச்செய்தும், மதுரையில் ஓரந்தணன் இழந்த பார்வையை இறைவனைவேண்டிப் பெறச்செய்தும், திருக்கானப்பேர் எனும் காளையார்கோயிலில் அமணர்கள் திடுக்குற மழை பெய்யச்செய்தும், ஸ்ரீ காசியில் அராத்தீண்டிய மன்னனதுமகனை உயிர்ப்பித்தும், அம்மன்னனது வேண்டுகோட்படி வற்கடந்தீர மழைபொழிவித்தும், இன்னோரன்ன அற்புதங்கள் பல செய்தவரும் தருமபுரஆதீன முதற் குரவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகளுக்கு ஞானகுருவாய்த் திகழ்ந்து, அவர்களால் பண்டாரக்கலித்துறை, சிவபோகசாரம்எனும்நூல்களில் துதிக்கப்பெற்றவரும், அநுட்டான அகவல் சிவானந்தபோதம் அத்துவாக்கட்டளை முதலான நூல்களை யாத்தவரும், 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கிப் பல சீடர்களுக்குத் தென்கமலைவாழ் சித்திதருநாதனால் அருள்புரிந்தவருமாகிய கமலைஞானப்பிரகாச தேசிகமூர்த்திகளை நினைந்து உய்யும்வண்ணம் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது "ஸ்ரீ காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு" எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்) பெறுமானமுள்ள 3 சதவீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார்கடன் பத்திரமாக உள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 நெ. சி. ஏ. 125543, இந்நிதியை ஏற்படுத்தியவர்களும் அவர்கட்குப் பின் வரும் உரிமையுள்ளவர்களும் இந்நிதியைப் பரிபாலனம் செய்வர்.

3. இம் முதற் பொருளினின்று வரும் வட்டித் தொகையைக் கொண்டு காசியில் நமது கட்டிடத்தில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனித் திங்கள் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி முடிய பிராமண போசனம், மாகேசுவர பூசை (சைவர்களுக்கு அன்னமளிப்பு) முதலியன செய்யப் பயன்படுத்தப்பெறும்.

4. அந்தந்த ஆண்டு வட்டி வருமானத்துக்குத் தகுந்தவாறும், கால நிலைக்கு ஏற்றவாறும் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாபிதாவின்படிக்கு மாகேசுவர பூசை முதலியன நடத்தப்பெறும்.

5. இத்தருமம் வேறு எதற்கும் பயன்படுத்தப்பெறமாட்டாது. மூலதனம் அரசினரால் திரும்ப அளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களிலேயே திரும்பவும் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள், 9—4—52. } **Sd. Kasivasi Arulnandi Tambiran.**

---

Registered at Tiruvadamarudhur Sub Register's office as No. 28 of 1952 book No. 4, Volume No. 44. dated 9—4—52

---

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபை ஆண்டுவிழா.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 68-ஆம் ஆண்டு நிறைவு விழா, வரும் வைகாசித் திங்கள் ௧௧, ௧௨ (1952 மே மீ 24, 25) ஆம் நாட்களில் நடைபெறும். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சின்னப்பட்டம் ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகளவர்கள் விழாப் பேரவையின் தலைமை தாங்க அருளாணையளித்திருக்கின்றார்கள். தேவகோட்டைத் தமிழ்வள்ளல் திருவாளர் சேவு. மெய்யப்ப செட்டியாரவர்கள், விழாப் பேரவையைத் தொடங்கி வைப்பார்கள். பல அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள். சபையைச் சார்ந்த பாகம்பிரியாள் மாதர் கழக 24-வது ஆண்டு நிறைவு விழாவும் 26—5—52-ல் அண்ணாமலைநகர் திருமதி. பு. ச. சா. இராஜேசுவரி அம்மையார் தலைமையில் நடைபெறும்.

## தருமை, துறைசை

# ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்கள்

## திருவஞ்சைக்கள யாத்திரை

மலை நாட்டில் விளங்கும் திருப்பாடல்பெற்ற சிவஸ்தலம் அஞ்சைக்களம் ஒன்றுதான். சுந்தரமூர்த்திசுவாமிகள் மலைநாட்டில் சேரமான்பெருமாளுடன்கூட எழுந்தருளியிருக்கும் நாளில் ஒருநாள் அருகேயுள்ளதான இத்தலத்திற்கு வழிபட வந்தார். முறையாக வலம் வந்து பெருமான் திருமுன் நின்று 'இவ்வுலக வாழ்க்கையை அறுத்திட வேண்டும்' என்ற குறிப்புடன் 'தலைக்குத் தலை மாலை' என்று தொடங்கித் திருப்பதிகம் பாடுகின்றார். கயிலையினின்றும் இறைவன் ஆணைப்படி தேவர்கள் வெள்ளானையுடன் வந்து 'எம்பிரான் அருளிப்பாடு' என வணங்கினர். வாத்தியங்கள் ஒலிக்க, தேவர்கள் பூமழை பொழிய, சேரமானை எண்ணிய மனத்தராய் யானைமீது ஆரோகணித்தார் சுந்தரர். அவ்வளவுதான்; யானை விண்ணின்மேற் பாய்ந்து பறந்தது. இது கண்ட சேரமானும் அருகில் நின்ற குதிரையின் மீது ஏறிக்கொண்டு இத்தலத்து வந்தார்; குதிரையின் காதில் சிவமந்திரத்தை ஓதினர். செவி ஏற்ற குதிரையும் ஆகாயத்தில் பாய்ந்து சென்று வெள்ளானையை ஒருமுறை வலமாகவந்து அதற்கு முன்னாலே சேவித்துச்சென்றது. சுந்தரர் யானைமீது செல்லும்போது பாடிய பதிகம் 'தானெனை முன்படைத்தான்' என்பது. 'முடிப்பது கங்கையும்' என்ற பதிகம் இத்தலத்தில் முதலில் பாடப்பட்டது. பரசுராமர் தந்தை ஆணைப்படியே தாயைக்கொன்றபாவத்தைப்போக்கிக்கொண்டதும் இங்குதான். இத்தகைய பெருஞ்சிறப்புற்ற திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியிருக்கும் அஞ்சைக்களத்தப்பனை வழிபடவேண்டியது இன்றியமையாததல்லவா?

தருமபுர ஆதீன மகாசந்நிதானம் அவர்களும் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் அவர்களும் அடிக்கடி ஒருவருக்கொருவர் நேரில் கண்டு அளவளாவுகின்றபொழுதெல்லாம் துறைசை மகாசந்நிதானம் அவர்கள் 'திருவஞ்சைக்களத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வரவேண்டும்; நாம் இருவரும் ஒருங்கு சென்று வழிபாடு செய்யவேண்டும்' என்ற தம் கருத்தையும் வெளியிட்டுவருவார்கள். அதன்படி இருவர்களும்

21—4—52 சோமவார தினத்தன்று சென்று வழிபாடாற்றி வரலாம் என்று முடிவு செய்து கொண்டார்கள். தருமைக்கும் திருவஞ்சைக்களத்துக்கும் சுமார் 315 கல் தொலைவிருக்கும், ஒரே நாளில் யாத்திரையை முடித்துவிடவேண்டும் என்பது அவர்கள் திருவுள்ளம். ஆதலின் துறைசை மகாசந்நிதானம் அவர்கள் தமது ஆதீன மானேஜரை ஒருவாரத்திற்கு முன்பு அஞ்சைக்களத்திற்கு அனுப்பி 'கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து, போகும்வழி வரும்வழிகளை நன்கு கவனித்து வரவேண்டும்' என்று ஆணை தந்தார்கள். அதன்படி அவர்களும் காரிலேயே சென்று வழிபார்த்து வந்தார்கள். யாத்திரைக்கு முன்பு துறைசை மகாசந்நிதானம் அவர்களும் ஒருமுறை தருமைக்கு வந்து, போகும் வழிகளைப்பற்றி உரையாடிச் சென்றார்கள். தருமபுர ஆதீன சூபரிண்டெண்டு ஒருவரைத் திருச்சிக்கு அனுப்பி அங்கும் முன்னேற்பாடுகள் செய்யப் பட்டன.

21—4—52 காலை 4 மணிக்குள் இருமகாசந்நிதானங்களும் பூஜைகளை முடித்துக்கொண்டு யாத்திரை தொடங்கினார்கள். விடியல் 6½ மணி. திருச்சியடைந்தார்கள். தாயுமானவர் அருளிப் பாடு பார்க்கப்பெற்றது. திருச்சி மலைக்கோட்டை மவுனமடம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள் கொலுவழிபாடுசெய்து திருநீறு பெற்றுக் கொண்டார்கள். முனிசிபல் கமிஷனர், திரு. கீ. ராமலிங்க முதலியார், சப்ஜட்ஜ், திரு. இரத்தின முதலியார் உள்ளிட்ட பிரமுகர்களும் வந்து குருவழிபாடாற்றி, திருநீற்றுப்பிரஸாதம் பெற்றுக்கொண்டார்கள். தஞ்சை ஜில்லா ஜட்ஜ், நாகை திரு. அகிலாண்டம் பிள்ளை அவர்கள் B.A., B.L., துறைசையாதீன மகாசந்நிதானம் அவர்கள் கூடவே வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. பிறகு அங்கு நின்றும் புறப்பட்டுச் சுமார் 11¼ மணிக் கெல்லாம் கரூர், தாராபுரம், உடுமலைப்பேட்டை வழியாகப் பொள்ளாச்சியை அடைந்தார்கள்.

பொருளாட்சிதான் பொள்ளாச்சி என்று மருவி வழங்கப் படுகிறதாம். ஆகவே பொள்ளாச்சி வாசியாகிய திருவாளர் ஜி. கோபால் செட்டியார் அவர்கள் பொருளாட்சியும் உடைய வர்கள், மேலும் பல தொழிற்சாலைகளையும் அவர்கள் வைத்து நடத்துகிறார்கள்- அச்சாலைகளால் பல ஏழைகள் பயன்பெறு

கிறார்கள். அதுமட்டுமல்ல. சிறந்த சைவாபிமானி. அன்புடன் யாரிடத்தும் பழகுபவர். ஆதீனங்களிடத்தில் நிறைந்த அன்பு அவருக்கு. முருகனிடத்திலும் நிறைந்த பக்தி. இத்தகைய அன்பர் இரு குரு மகா சந்நிதானங்களும் திருவஞ்சைக்களத்திற்கு எழுந்தருளுவதைக் கேள்விப்பட்டவுடன் ஆதீனங்களுக்கு வந்து மகாசந்நிதானங்களை நேரில் தரிசித்தார். 'யாத்திரையில் இடையிலுள்ள எங்கள் நகருக்கும் எழுந்தருளி அருள் வழங்கவேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதன்படியே அன்றைக்கு வரவேற்புக்கு ஏற்பாடுசெய்துவைத்துக்கொண்டு பிரமுகர்களுடன் ஊரெல்லைக்கே வந்து மகாசந்நிதானங்களின் வருகையை எதிர்நோக்கி யிருந்தார். கோவை பேரறிஞர் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், புரிசை முருகேச முதலியார் அவர்கள் உள்ளிட்ட அன்பர்களும் வரவேற்பில் கலந்துகொண்டார்கள்.

மணி 11. பொள்ளாச்சி எல்லைக்குக் கார் வந்து சேர்ந்தது. அன்பர்கள் வரவேற்க, செட்டியார் அவர்கள் தமது ராஜா மில்லுக்கு அழைத்துச் சென்றார்கள்- M. L. A., M. L. C. நகர சபைத் தலைவர், உறுப்பினர்கள், மற்றும் பல அன்பர்கள் அனைவரும் அங்குவந்து மகா சந்நிதானங்களைத் தரிசித்து வழிபட்டு, நகரசபைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கும் பெருங்கூட்டம். இரு பெரு மகாசந்நிதானங்களை ஒருசேரக் காணும் பேறுபெற்றோமே என்ற ஆனந்தம் அன்பர்களுக்கு. இதற்கிடையில் புரட்சி வீரர்களும் தங்கள் வீரமுழக்கத்தை எழுப்பினார்கள்.

இரு மகாசந்நிதானங்களும் ஆசனத்தில் அமர்ந்தார்கள். நகரசபைத் தலைவர் திரு. சேதுராமசாமிக் கவுண்டர் அவர்கள் நகரசபையின் சார்பில் ஒரு வரவேற்புரையை வாசித்து மகா சந்நிதானங்களிடம் சமர்ப்பித்தார். அடுத்து நகரமக்களின் சார்பில் திரு. N. மகாலிங்கம் M. L. A. அவர்கள் ஒரு வரவேற்புரையை வாசித்தார்.

இவைகளை அன்போடு ஏற்றுக்கொண்டு தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,

'நாங்கள் இங்குவரும்வழியில் முழக்கங்கள் தோன்றின அல்லவா? அவ் ஒலி மேலும் மேலும் எங்களை நல்வழியில் ஊக்குவதாகும்; ஆனால் இவ்விதமான எண்ணங்கள்

அன்னியர்கள் நம்நாட்டை ஆண்டுவந்தகாலத்தில் எழுப்பப்பட்டு வந்தது. இப்பொழுது நம்நாடு சுதந்திரமடைந்து நாம் எல்லாம் இந்நாட்டு மன்னர்களாகிவிட்டோம். நாட்டை ஆளும்பொறுப்பும் நமக்கு வந்துவிட்டது. இந்தநிலையில் வீண் கூச்சல்களைப் போட்டுக்கொண்டிருப்பதால் பயனில்லை; நாம் சிந்தித்துப் பேச வேண்டியபொறுப்பு நமக்கு வந்துவிட்டது. அவ்விதமில்லாமல் வெறும் ஆரவாரம் போடுபவர்களுக்கு வள்ளுவர் ஒன்றுசொல்லுவார்; வள்ளுவரை மிகவும் போற்றுகிறோமல்லவா இப்பொழுது; அவர்சொல்வதையும் ஞாபகத்திற்குக்கொண்டுவரவேண்டியதுதானே!

"பயனில சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்கிறார் அவர். பொதுவாக ஆஸ்திகம் வளர்ந்தால்தான் நாடு வளர்ச்சியடையும்; நாஸ்திகத்தால் வளர்ச்சியடையாது. அதற்குஅடிப்படையாகவேண்டுவது அன்பு. அந்த அன்பும் அரனடியில் செலுத்தப்பட வேண்டுவதாகும்,

"ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பிலார் தமக்கும் அன்பில்லார்"

என்கிறது ஞானசாத்திர நூல். ஈசனிடம் அன்புடையார்கள் தான் பிறரிடமும் அன்புகாட்டமுடியும், அடியார்களிடத்தில் அன்பு காட்டினல்தான் அதன்விளைவாக ஈசனிடத்தில்அன்பு உண்டாகும். அடியாரிடத்தில் அன்பு இல்லாதபோது ஈசனிடத்தில் அன்புவைப்பதால் யாதொரு பயனும் இல்லை. இவ்வாறு அடியாரிடத்திலும் ஈசனிடத்திலும் அன்பில்லாதவர்கள் தம்முயிரிடத்தும் அன்பில்லாதவர்களே. ஆகவே வளர்ச்சிக்கு வேண்டியதான ஆஸ்திகபுத்தியை வளர்க்க வேண்டும்.

நீங்கள் இப்பொழுது அளித்தபாராட்டுரைகளில் நாங்கள் பலகாரியங்களைச்செய்ததாகப்பாராட்டியிருக்கிறீர்கள். அவைகள் நாங்கள் செய்யவேண்டிய கடமைகளே; அவைகளைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம்; இன்னும் உங்களுடைய அன்பும் ஆண்டவன் அருளும் இருக்குமேயானல் மேலும் பல பல நற்காரியங்களைச் செய்ய முடியும், ஆகவே இவ்விதம் பாராட்டுரை வழங்கிய அன்பர்களுக்கு, எல்லாம் வல்ல

சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் நல்லன எல்லாம் சித்திக்குமாக. திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானமும் நமசிவாயமூர்த்திகளின் திருவருள் நிறைவதாக என ஆசீர் வதிக்கிறுர்கள். இவ்விதமாகச் சிறந்தமுறையில் வரவேற்புக் கள் எங்களுக்குக் கிடைக்கும்படி முயற்சி எடுத்துக் கொண்ட திருவாளர் கோபால் செட்டியாரவர்களுக்கும் எங்கள் ஆசி என்றும் இருப்பதாக.

என்று ஆசிவழங்கினுர்கள். பிறகு அங்கிருந்து திரு. செட்டியார் அவர்கள் தமது இல்லத்திற்கு அழைத்துச்சென்று, கொலுவில் எழுந்தருளச்செய்து ஆதீன முறைப்படி வழிபாடுகளையெல்லாம் செய்வித்தார்கள். ஒரு வரவேற்பு மலரையும் அணிந்து திருநீறு பெற்றுமகிழ்ந்தார்கள். செட்டியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி உபசரிக்கப்பெற்றது. அனைவர்க்கும் அறுசுவையுணவு அளிக்கப்பட்டது. அன்று அங்கு தருமபுர ஆதீனப் பிரசாரமும் நடந்துகொண்டிருந்தது.

பிறகு அங்கிருந்து பாலக்காடு, திருச்சூர், இருஞாலக்குடா இவைகளைக் கடந்து உப்பங்கழியையும் தாண்டி, கொடுங் கோளூரை அடைந்தார்கள். மணி 7-இருக்கும். நீர்த்துறை யிலேயே கொச்சிநாட்டின் தேவாலய கண்காணிப்பாளர் திரு. T. A. பரமேஸ்வர ஐயர் அவர்கள் B. A.. அருளிப்பாடுடன் வரவேற்று அழைத்துச் சென்றுர்கள், அஞ்சைக்களத்திற்குப் போகும்வழியிலுள்ளது பகவதி கோயில். அது செங்குட்டுவன் செய்த கண்ணகிபிரதிட்டை என்று கூறப்படுகிறது. துறைசை யாதீன மகாசந்நிதானம் அவர்களின் ஆணையின்வண்ணம் அன்பர் கோவை, சிவக்கவிமணி C, K, சுப்பிரமணிய முதலியார் அவர்களும் பகவதி கோயிலுக்கு முன்னரே சென்று மகா சந்நிதானங்களின் வருகையை எதிர்நோக்கியிருந்தார்கள். அக்கோயிலிலுள்ள பெருமானைச் சிவன் என்றுதான் மக்கள் சொல்லுவார்கள். வீரபத்திரர் வழிபாடு அங்கு மிகச்சிறந்தது. அவரைப் பரதர் என்று மக்கள் அழைக்கிறுர்கள். அவருக்கு முழுத்தேங்காய்தான் நிவேதிக்கப்படுகின்றது. அடுக்கடுக்காகக் கல்லிலேயே விளக்கு அமைக்கப்பெற்றுள்ளது. அது எரியும் காட்சி ஒரு தனியழகு. பழைய பகவதி மிகுந்த கோரமாக விளங்கியதால், அதனை மறைத்து மூடி அதற்கு முன்புறம் வேறு பகவதியைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வருகின்றுர்

கள். அதற்குப்பக்கத்தில் மேருவும் பிரதிட்டை செய்யப் பட்டுள்ளது. இவைகளுக்கெல்லாம் விசேஷ வழிபாடு நடத்தப் பெற்றது.

பிறகு அங்கிருந்து அஞ்சைக்களத்திற்கு எழுந்தருளினார்கள். மணி 8 இருக்கும், அங்கும் T. A. பரமேஸ்வர ஐயர் அவர்கள் ஆலய முகப்பிலேயே சம்பிரதாயப்படி வரவேற்று அழைத்துச்சென்றார்கள். இறைவன் திருநாமம் அஞ்சைக் களத்தப்பர், அம்மைக்கும் முருகனுக்கும் தனித்தனியே சிறுசிறு கோயில்கள் வெளிப்பிராகாரத்தில் உள்ளன. விநாயகர் வலம்புரி விநாயகர் எனப்படுவர், அவருக்கு வலதுபுறம் ஒரே ஆசனத்தில் சேரமான் பெருமாளும் சுந்தரரும் உற்சவத் திருமேனியாகக் காட்சியளிக்கிறார். சேரமான் திருக்கரத்தில் வில்ஏந்தியுள்ளார், இவ்வாலயத்தில் விளங்கும் நடராஜப் பெருமான், சேரமானால் வழிபடப்பட்ட அருமையான மூர்த்தி. இவர் திருக்கரத்தில் தாண்டாயுதம் ஏந்தியுள்ளார். சேரமானுக்கு நாடோறும் பூஜை முடிவில் சிலம்பொலி காட்டி 'உமது பூஜையை ஏற்றுக்கொண் டோம்' என்று குறிப்பித்தவரும் இவரே. இவைகளுக்கெல்லாம் விசேஷ வழிபாடுகள் நடைபெறச்செய்து தரிசனம் செய்தருளி னார்கள். தலப்பதிகமும் பாராயணம் செய்யப்பெற்றது. திரு அஞ்சைக்களத் திருப்பதிகம், திருநொடித்தான்மலைத் திருப் பதிகம் பொழிப்புரைகளுடன், திருக்கயிலாயஞான உலா மூலம் ஆகிய இவைகள் அடங்கிய (திருவாவடுதுறையாதீன வெளியீடு) **அஞ்சைக்கள யாத்திரை விஜயமலரும்** அன்பர்கட்கு வழங்கப் பெற்றது. மணியும் 10-ஆயிற்று, பிறகு ஆதீனத்திற்கு எழுந் தருளத் திருவுள்ளங்கொண்டார்கள்.

திருச்சூர் வரையிலும் முன்சென்ற வழியே வந்து அங்கு நின்று நெம்மேரா, கொல்லங்கோடு வழியாக மீண்டும் பொள்ளாச்சிக்கு எழுந்தருளியானார்கள். மணி $1\frac{1}{2}$. அங்கேயே சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு பிறகு விடியலில் அங்கு நின்றும் புறப்பட்டு 9 மணிக்கெல்லாம் திருச்சிக்கு எழுந்தருளி னார்கள், திருச்சியிலிருந்து துறைசை மகாசந்நிதானம் அவர்கள் திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தார்கள். தருமை மகா சந்நிதானம் அவர்கள் அங்கேயே தங்கியிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு மாலை $4\frac{1}{2}$ மணிக்கெல்லாம் புறப்பட்டுத் தருமைக்கு எழுந்தருளியானார்கள்.

திருவஞ்சைக்கள யாத்திரையில்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களுக்குப்

## பொள்ளாச்சியில் அளித்த வரவேற்புரைகள்.

**சைவசித்தாந்த சற்குரு மணிகாள் !**

"சைவ சமயமே சமயம்" என்று பாராட்டப்பெற்ற நமதுசமயத்துக்கு ஊன்றுகோல்களாகவும் அஞ்ஞான இருளில் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மகோடிகளுக்குச் செந்நெறிகாட்டும் சிறந்த இரு கண்களாகவும் விளங்குகின்ற ஞானகுரு சிகா மணிகளே! வருக. உங்கள் வரவு நல்வரவாகுக.

ஆத்திகம் அருகி நாத்திகம்பெருகி வருகின்ற இச்சமயத் தில் பல தலங்கள்தோறும் சென்று அடியார்களுக்குத் திருவருள் காட்சி கொடுத்துத் தென்னாடு முதலாக எந்நாடும் உய்யச் சிவஞானப் பேரொளியைப் பரப்பிவரும் தங்கள் சிவத் தொண்டு பெரிதும் வெற்றி தருவதாக.

**கயிலாய பரம்பரைக் கருணைநிதிகளே!**

முடியுடைய மன்னர் மூவர்க்குப் பின்னர், அமிழ்தினும் இனிய தமிழ்மொழியையும் தெய்வம் பழுத்த சைவ சித்தாந் தத்தையும் பேணிவளர்க்கும் பெருமை தங்கள் ஆதீனங் களுக்கே உரியதாகும்.

செந்தமிழ்க் கல்லூரி முதல் ஆரம்பப்பள்ளி இறுதியாக உள்ள எல்லாவகையான பள்ளிகட்கும் தங்கள் சந்நிதானம் வரையாது கொடுத்துவந்த செல்வக் குவியல் ஒருமேருக்கு ஒப்பாகும் என்று கூறுவது மிகையாகாது என்று நினைக்கிறோம். அரும்பெரும் ஞானச்செல்வர்களாகிய நீங்கள் ஒருங்கே எழுந்தருளி எங்கட்குக் காட்சிகொடுத்ததைப்பற்றி

இப் பொருளாட்சி மாநகரம் மட்டிலா மகிழ்ச்சி கொள்ளு கிறது,

உங்கள் திருத்தொண்டு என்றும் நிலைத்திருக்கத் தங்கட்குப் பல்லாண்டு கூறுகிறோம், இறைவன் திருவடி என்றும் வெல்க.

பொள்ளாச்சி
21—4—52

**G. கோபால்செட்டியார்,**
உரிமையாளர்
**ராஜா மில்ஸ், பொள்ளாச்சி**

**ஞானசம்பந்த நல்லருட் குருவே!**
**கைலை வழிவரும் சமய குரவ! வருக! வருக!**
**மாண்பொடு வருக!**

தண்டமிழ் நாட்டின் எல்லைப்புறத்திலுள்ள எங்கள் கொங்கு நாட்டிற்குவந்து, எங்கள் ஊரில் தங்கி, எங்களுக்குக் காட்சிகொடுக்கும் தேவரீரது பேரருட் கருணையைப் போற்று கின்றோம். பெறற்கரிய இப்பெரும் பேற்றை எண்மையிற் பெற எங்கள் நாடும் நகரும் செய்த தவம் யாதோ அறிகி லோம். குடிமக்களாகிய எங்கள் முன்னோர்களின் தவப்பயன் என்றே கொள்ளுகின்றோம்.

**சிவஞான மழைபொழியும் தவஞானக் கொண்டலே!**

தெய்வ உணர்வும் சமய நெறியும் அருகிவரும் இந்த நாளிலே, தேவரீர்களைப் போன்ற மகாசந்நிதானங்கள், நாட்டின் பல பாகங்களுக்கும் எழுந்தருளித் தெய்வவழி பாட்டுக்கும் சமயநெறி வளர்ச்சிக்கும் ஆக்கம்தேடி ஊக்கம் ஊட்டிவருவது போற்றற்குரியதாம். தெய்வத் தமிழையும் சைவநெறியையும் தொன்று தொட்டுத் தொடர்ந்து வளர்க் கும் கடப்பாடுடையவர்கள், கயிலைவழி வந்த சந்தான குரவர்கள் ஆவர். அறநிலையங்களில் முன்னணியில் இருக்கும்

தங்கள் ஆதீனம், அவ்வற நிலையங்களின் இன்றியமையாக் கடமைகளான ஆலய பரிபாலனம் சமய பரிபாலனம் ஆகிய வற்றிலும் சிறப்புற்று விளங்குவதறிந்து உளம் மகிழ் கின்றோம்.

**அறிவொளி பரப்பும் அருமறை அண்ணலே!**

மக்கள் அனைவரும் நல்லறிவுபெற்றுத் தூய ஒழுக்கம் உடையவராக வாழ்ந்து மனிதப்பிறவியின் பெரும் பேறு பெற்றுய்யவேண்டி அவாவுற்று, அரிய சமயநூல்களையும் நீதி நூல்களையும் இலவசமாக வழங்கி நாடெங்கும் நல்லொளி பரவச்செய்கின்றீர்கள். மற்றும் தங்கள் ஆட்சியிலுள்ள ஆலயங்களைத் துப்புரவான நிலையில் எப்பொழுதும் இருக்கச் செய்து பூசைகள், விழாக்கள் முறைப்படி நடைபெறச் செய்கிறீர்கள், பல நூல் நிலையங்களையும் படிப்பகங்களையும் பாடசாலைகளையும் நிறுவி, உயிர்க்கு உறுதிதரும் கல்வியை யாவரும் எளிதில்பெற வகைசெய்கின்றீர்கள்.

**பல்லுயிர்க் கிரங்கும் பரமாசாரிய!**

இன்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர், மலைநாட்டுத் திருவஞ்சைக்களத்திலிருந்து ஆளுடைய தோழரும் அவருடைய தோழர் சேரமான் பெருமானும் சேரச்சென்று கைலையடைந்த திருநாள் அடுத்துவரும் ஆடித் திங்களில் வருகின்றது. அது போது தேவரீர் மீண்டும் ஒருமுறை திருவஞ்சைக்களத்தெழுந் தருளியிருக்கும் அஞ்சை யப்பரைத் தரிசிக்கும் பொருட்டு வருவீர்களென்றும், அப்பொழுதும் எங்களிடை வந்து தங்கிக் காட்சி தருவீர்கள் என்றும் நம்புகிறோம். எங்கள் நகர்க்கெழுந்தருளிய தங்கள் பேரன்பை வாயார வாழ்த்தித் தேவரீரது பொன்னுர் திருவடிகளைச் சென்னியிற்கொண்டு இறைஞ்சுகின்றோம்.

பொருளாட்சி,
21—4—52.

இங்ஙனம்
பொருளாட்சி நகரப் பொதுமக்கள்.

**சிவஞானமழைபொழியும் தவஞானக்கொண்டலேவருக!**

ஞானபீடத்தமர்ந்து அருட்செங்கோலோச்சி அரசுபுரியும் பரமாசாரியரே வருக! மாண்பொடு வருக!! பொருளாட்சி நகர மக்கள் பலரும் கண்டு போற்றிக் களித்திட வருக!!!

தண்டமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் கண் எனப் பேணிக் கருத்துடன் வளர்க்கும் தமிழ் நாட்டுச் சமய நிலையங்களுட் சிறப்புற்று விளங்குவன ஒருசில; அவற்றுளும் முதல் வரிசையில் வைத்து எண்ணப்படுவன, திருக்கயிலாய பரம்பரை ஆதீனங்களான திருவாவடுதுறையும் தருமபுரமு மாம். பழமையும் பெருமையும் பொருந்திய இவ்விரு ஞான பீடங்களின் ஆதீனகர்த்தர்கள் இருவரும் இன்று சேர இருந்து காட்சியளிப்பது, எங்கள் கொங்கு நாடும் நகரமும் முன்னோர் களும் செய்த தவப்பயன் என்றே எண்ணி மகிழ்கின்றோம்.

**தருமையம்பதி தவராசரே!**

நீர்வளமும் நிலவளமும் சேர்ந்து பொருந்திய சோழவள நாட்டில் காவிரிக்கரையில் பெருமையோடிலங்கும் தருமை யம்பதியே, இன்று நம் தமிழ் நாட்டின் சிவராசதானியாக விளங்குகிறது, தேவரீரது ஆட்சியிலுள்ள 27 கோவில்களையும் கோவில் அறங்களையும், உலகம் போற்றும் வகையில் பரிபாலித்து வருகின்றீர்கள். மகாசந்நிதானத்தின் ஆட்சியில் உள்ள கோவில் என்பது அதன் துப்புரவான தோற்றத்தில் இருந்தே எளிதில் விளங்கும். கோவில்களிலே திருத்தமான முறையிலே வழிபாடியற்றும் வகைகளைக் கற்றுக்கொள்வதற் கேற்ற ஓர் ஆகமபாடசாலையைத் தேவரீர் தருமையம்பதியில் அமைத்து அழகுற நடத்தி வருகின்றீர்கள். ஆகமங்களைச் செம்மையாக அறிந்துகொள்ளும் ஆற்றலைப் பெறுவதற்குரிய வடமொழிப் பயிற்சியும் தேவரீரது கீழ்த்திசைக் கல்லூரியில் கற்பிக்கப்பெறுகிறது. தமிழ்மொழிப் புலமையும் திருமுறை

294.

களைப் பண்முறை தவருது ஓதும் திறமையும் பெறுவதற்குரிய கல்வித்திட்டமும் அக்கல்லூரியில் அமைக்கப்பெற்றுள்ளது,

**அனைத்துயிர் ஒன்றென்றெண்ணும் அந்தணளரே!**

உரிய உயிர்கட்கு உயர்ஞானம் வழங்கும் வல்லமை உடைய தேவரீர், எளியார்க்கு எளியராகவும், ஏழை பங்காள ராகவும் விளங்கி வருகிறீர்கள். சமூகத்தின் பல்வேறு குழு வினரும் தொழிலினரும் தேவரீரது பரந்த கருணைக்கு உரியவரன்றோ? ஹரிஜனங்கள் என்னும் திருக்குலத்தார்க்குத் தருமையம்பதியில் அன்றாடம் அறுசுவை உண்டி அளித்து வருவதுடன் அக்குலத்துப் பிள்ளைகள் மற்ற இனத்துப் பிள்ளைகளுடன் கலந்து சம்பளமின்றியும், நூல் முதலியன இலவசமாகப் பெற்றும் எட்டாம் வகுப்புவரை படிக்க ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரி களில் படிக்கும் மாணவர் பலர்க்கும் இனவேறுபாடின்றிச் சம்பளம் புத்தகம் நன்கொடையளித்து வருகிறீர்கள். திருக் குலத்தார் ஆலயங்கட்குச் சென்று வழிபடத் தேவரீரது ஆதீனத்திலுள்ள கோயில்களே முதன்முதலில் திறந்து விடப் பட்டன.

**அறம்பல வழங்கும் அருங்கொடை வள்ளலே!**

இரப்போர்க்கு இல்லையென்னுதை இதயம் படைத்தவ ராதலின் தேவரீரது கருத்தைக்கவரும் எவையும், நன்கொடை பெருதிரா. ஆதீனத்தின் நன்கொடை பெற்று அழகிய கட்டிடங்கள் அமைத்துக்கொண்ட பள்ளிகள் பல; ஆக்கம் பெற்றுள்ள அறநிலையங்கள் பல. மொழிக்கென்றும் கல்விக் கென்றும் சமயத்திற்கென்றும் இடம்பெயர்ந்த ஏழைகட் கென்றும் தேவரீர் வழங்கிவரும் நன்கொடைகள் எண்ணில. வடலூர் சத்தியஞானசபைக்கும் தஞ்சைமாவட்டக்காசநோய் மருத்துவசாலைக்கும் தாங்கள் வழங்கிய பெருந் தொகைகள்

போற்றிப் புகழ்வதற்குரியன, மாயூரத்தில் இரண்டரை ல்க்ஷம்ரூபாய்செலவில் மகப்பேறுமருத்துவச்சாலே அமைத்துக் கொடுத்த அருமையையறிந்து இறும்பூதெய்துகிறேம். இவ் விதம் வரையாதளிக்கும் வள்ளன்மையையும் பெருங்கருணைத் திறத்தையும் எண்ணிஎண்ணிவியந்துவியந்து இன்புறுகிறேம்.

**ஞானசம்பந்த நல்அருட்குருவே!**

தமிழ்மறந்த தலைநகராம் திருவஞ்சைக் களத்தில் கோயில் கொண்டிருக்கும் அஞ்சையப்பரைத் தரிசிக்கும் பொருட்டுச் செல்லும் வழியில் எங்கள் பொருளாட்சி நகரில் சிறிதுநேரம் தங்கி எங்கட்குக் காட்சியளித்து ஞானஅருள் வழங்குவதற்கு இசைந்த தேவரீரது பெருங்கருணையைப் போற்றி வாழ்த்துகின்றேம். பெறற்கரிய இப்பெரும்பேற்றை எளிதில் எங்கட்கு இசைவித்த மெய்யன்பர் திருவாளர் **G. கோபால்செட்டியார்** அவர்களின் நன்முயற்சியையும் பேரார் வத்தையும் நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றேம்.

**பல்லுயிர்க்கிரங்கும் பரமாசாரிய!**

தேவரீர் எல்லா நலங்களும் குறைவற உடையவராகித் திகழ்ந்து நிலமிசை நீடு வாழவும், ஞானபீடத்திலிருந்து அறநெறியும் அருளொளியும் தொடர்ந்துபரவி ஓங்கிவளரவும் இப்பொருளாட்சி நகரமக்கள் நாற்பதாயிரவர் சார்பாக எல்லால்வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுகிறேம்.

நகராட்சி அலுவலகம்,
21—4—52.

இங்ஙனம்,
**நகராட்சிக் கழகத்தார்.**

296

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஹூ வைகாசிமீ 1உ முதல் 31உ வரையில்)

(14—5—52 முதல் 13—6—52 வரையில்)

**1. மேஷம். அசுவதி, பரணி, கார்த்திகை ¼.**

இம்மாதம் முற்பாதி முடிய சுபத்தையேதரும். இராஜ பிரீதி, வியாபாரவிருத்தி, தனலாபம், பிரதாபம், நூதன முறையில் தொழில்சேர்தல், சத்துரு பராஜயம் சந்தோஷம், சிவபூஜாபலன். தேவதா தரிசனம், காரியவெற்றிகள் ஏற்படும், பிற்பாதியில் பரணி கார்த்திகை சம்பந்தப்பட்ட மேஷராசி பலன், மாறும், உஷ்ணரோகம், வருமானக்குறைவு, சத்துருக் களால் வஞ்சிக்கப்படல், அவமானமடைதல், சிரோரோகம், நேத்திரபீடை முதலியவைகள் காட்டும், வியாழனும் சனியும் சுபவாரமாகும்.

**2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.**

கார்த்திகைக்கும், மிருகசீரிஷத்துக்கும் விருஷபராசி பலன் ரோகத்தைத்தரும், வரவுக்கு மிஞ்சின செலவும் ஆப்த நண்பர் களுக்குப் பல சிரமங்கள் ஏற்பட்டு உதவிக்குப் போகும்போது அதில் பல கஷ்டங்கள் ஏற்படுதலும், காலிகன்று குறைவும், உத்தியோகஸ்தர்களுக்கு அதிக வேலையும் இடம்மாறலும் அப கீர்த்தியும் மனக்கிலேசமும் உண்டாகும். ரோஹிணி சம்பந்தப் பட்டவரை மிசிர பலனைத்தரும். தொழிலாளியும் ஏமாத்தும் தொழில் உள்ளவனும் உத்ஸாஹியாய் இருப்பன். பிரபுக்கள் வாடுவார்கள்,

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.**

திருவாதிரை, புனர்பூசம். சம்பந்தப்பட்ட மிதுனராசி பலன் துக்கத்தைத்தரும். பல கவலைகள் குடிகொள்ளும், அதிகச் செலவுகளும், தொழிலாளிகளால் தொல்லையும், சுபசோப னதிகள் மூலம் விசேஷ விரயமும் எதிர்பாராத சம்பவங்களும்,

இல்லற கஷ்டங்களும், ஒற்றுமைக் குறைவும் ஏற்படும், மிருக சீரிஷம் சம்பந்தப்பட்டவரை கொஞ்சம் சுபத்தைக்காட்டும். தொழில் விருத்தி, பெரியோர் மேலோர் சேர்க்கை, தூர யாத்திரை. சென்றவிடங்களில் சிறப்பு, தெய்வசக்தி தோன்றுதல், ஆஸ்தீகபுத்தி விருத்தியாகுதல், முதலிய சுபங்கள் ஏற்படும், வெள்ளிக்கிழமை சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.**

கடக ராசிபலன் பூரா எல்லோருக்கும், சுகத்தையே தரும், விவாஹாதி சுபங்கள், புண்ணிய காரியங்கள், கிணறு குளம் வெட்டுதல், வியவஹார வெற்றி, தொழில்மூலம் லாபம். நூதன வாஹனவிருத்தி, காலிகன்று விருத்தி, பந்து மித்திராளுடைய சேர்க்கை, வெகுநாளாக நடக்காத காரியம் ஆகுதல், மேலோர் பெரியோர் நன்மை, மனதுக்குச் சாந்தி, இல்லற சுகம் முதலிய நன்மைகளே நடக்கும், பூசநக்ஷத்திரத்துக்கு மாத்திரம் துஸ்ஸஹவாஸத்தால் துர்ப்புத்திஏற்பட்டுக் கஷ்டங்களை அனுபவிக்க நேரும், அதுவும் தேவபலமிருந்தால் விலகும்,

**5. சிம்மம். மகம், பூரம், உத்திரம் ¼**

மகம், உத்திரம் சம்பந்தப்பட்ட சிம்மராசிக்காரர்கள் ஷை மாதம் சுபமடைவார்கள். ரோகசாந்தி ஏற்படல் நல்லோர் பெரியோர் பழக்கம். புண்ணிய காரிய பிரவிருத்தி, வியவஹாரம் ராஜியாகுதல், மங்கள காரியங்கள், அலைச்சலில் காரியானுகூலம், சிநேஹிதர்களுக்கு உபகாரம் செய்தல் முதலிய சத்குணங்களும் சுபமும் ஏற்படும், பூரநக்ஷத்திரத்துக்கு ஸிம்ம ராசி பலன் மத்தியமமாகும், மாதத்தின் நடுப்பகுதி பத்துத் தினங்கள் சுபமாய் இருக்கும். மற்ற பகுதிகள் சிரமத்தைக் காட்டும். சனிக்கிழமை சுபமாகும்.

**6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.**

சித்திரை நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட கன்னியாராசி பலன், சுபமாகும், ஆனாலும் ஷை நக்ஷத்திரக்காரர்களுக்கு அதிகச் செலவும், குடும்பத் தொல்லைகளும் வியாதிபீடையும் மனக்கவலைகளும் ஏற்படும். மற்ற இரு நக்ஷத்திரக்காரர்களுக்கும் ஷை

மாதம் திருப்தியளிக்காது. ஆனாலும் சில அஸாத்திய காரியங்களைச்சாதித்தலும், நண்பர்களால் அநுகூலமும் நூதனதொழில் பழக்கமும் உத்தியோக மேன்மையும், சந்தோஷமும் ஏற்படும். எத்தனை சுபமிருந்தாலும் கன்னியாராசிக்காரர்கள் எல்லோருமே ஷ மாதம் மிகுந்த கவலையே அடைவார்கள். தெய்வ பலமுள்ளவர்கள் ஜயிப்பார்கள், சுக்கிரவாரம் சுபமாகும்.

## 7. துலாம். சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

இவ்ராசிக்காரர்கள் லௌகீக வியவஹாரங்களில் வெற்றியடைவார்கள். விசேஷ சலுகைகளும் சென்ற விடமெல்லாம் சிறப்பும், கீர்த்தி பத்திரமும், தொழில்மூலம் ஏராளமான லாபமும் இல்லற சுகமும் ஏற்படும். விசாகத்துக்கு மாத்திரம் கஷ்டபலனையே அனுபவிக்க நேரும். எத்தனை நன்மையும் அனுபவ காலத்தில் பயனளிக்காது. சதா அலைச்சலும் துஷ்டர்கள் சேர்க்கையும் காரியவிக்னங்களும் நஷ்டங்களும் அதிகத் தொல்லையுமே காட்டும். திங்கள் புதன் சுபவாரமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

அனுஷம் சம்பந்தப்பட்ட விருச்சிக ராசிபலன் சுபமாகும். சரீர சௌக்கியம் சந்தோஷம் வியவசாயத்தில் விசேஷ ஆதரவுகள், நூதன தொழில் பழக்கம், உத்யோக மேன்மை, காரியானுகூலம், மனதுக்கு ஒருவாறு சந்தோஷமும் உண்டாகும். மற்ற இரண்டு நக்ஷத்திரங்கள் சம்பந்தப்பட்டவரை கஷ்ட பலன்களே அதிகமாகும். பந்தப்படுதல். அடிமைப்படுதல், சோரபயம், தொழில்நஷ்டம், கீர்த்திபங்கம், தீட்டுக்காத்தல், பெரியோர்சாபம், ஒற்றுமைக்குறைவு இவை ஏற்படும். திங்கள் செவ்வாய் சுபமாகும்,

## 9. தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் ¼.

தனுர் ராசி ஷ மாதம் சுபமேயாகும்; ஆனாலும் மூலத்துக்கு மாத்திரம், ரோகபீடையைத் தரும். பூராடத்துக்குப் புத்திக் குழப்பமும், எதிர்பாராத செலவும் ஏற்படும். மொத்தத்தில் இம்மாதம் தனுர் ராசிக்காரர்கள் எல்லோருமே, நன்மை அடைவார்கள். பெரியோர்கள் அன்பு, சத்காரிய பிரவர்த்திக்கு

தைவானுகூலங்கள், நஷ்டதன பிராப்தி, தொழில் விருத்தி, சுபாதிகள், வித்வஜ்ஜன சேர்க்கை, காரியானுகூலம், காலிகன்று விருத்தி, வாஹனசேர்க்கை முதலிய சுபங்கள் ஏற்படும். வியாழனும் சனியும் சுபவாரமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

திருவோணம் அவிட்டம் சம்பந்தப்பட்ட மகரராசி பலன், சுபமாகும். தூரத்திலிருந்து சுப சமாசாரக் கேள்வி, வியாதி சாந்தி, தொழில் பழக்கம், வியாபாரவிருத்தி, மித்ராள் மூலம் அனுகூலம். நல்லோர் பெரியோர் பழக்கமடைதல், பந்துமித்திர சமாகமம், இல்லற சுகபோகங்கள், இவைகள் ஏற்படும். உத்திராட சம்பந்தப்பட்ட மகரம் வியாதியைத்தரும், வீண் அலைச்சல்கள் மேலதிகாரியின் தொல்லை. வீண் மனஸ்தாபம். சோர சத்துருபயம். தனநஷ்டம், அவமானச்சொல் கேள்வி, இவைகள் ஏற்பட்டு, கடைசியில் ஒருவாறு சமாதானத்தையும் தரும், புதன் வெள்ளி சுபவாரமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

இம்மாதம் கும்பராசி பலன் சுகமிராது. மிகுந்த கஷ்ட நஷ்டங்களையே உண்டுபண்ணும், நிமிஷம்கூட மனநிம்மதியே இராது, பிரபுக்களாகில் சதா சிரமத்தையே அடைவார்கள். பலவித சிரமங்கள் காட்டும். அதிகம் விவரிப்பதில் பயனில்லை. சதா தெய்வ சிந்தனை யுள்ளவர்களாகில் நலமடையலாம். புதனும் வெள்ளியும் சுபவாரமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி பலன் பூரா சுபமேயாகும், தொழில் விருத்தியாகுதல், நல்லோர் பெரியோர் உபகாரமடைதல், நஷ்டதன பிராப்தி, நூதன வியாபார விருத்தி, ஞானாதிக்கியம், இல்லற சுகம். சத் கர்மானுஷ்டானங்கள், நூதன வஸ்திராபரணச் சேர்க்கை, சத்சங்கம், ஆசாரியானுக்கிரஹம், கீர்த்தி பத்திரம் கிடைத்தல், சுபசோபனாதிகள், தூரயாத்திரை. மனோஉல்லாசம் சுபாதிகள் உண்டாகும். வியாழன் சனி சுபவாரமாகும்,

பவரும், சம்பது - தனம் தானியம் முதலியவற்றை, உறுவர் - அடைவர், தூயோரே என்றது தேவர்களை.

வி - ரை:- சரற்காலம் ஐப்பசி கார்த்திகை மாதங்கள். இக்காலத்தில் மேகங்கள் மழைபொழிந்து வெளுத்திருக்கும். ஆகாயம் நிர்மலமாயிருக்கும். சாந்திரமானப்படி புரட்டாசி மாதத்தில் அமாவாசை முடிந்து பிரதமைமுதல் சரற்காலம் ஆகிறது. பிரதமை முதற்கொண்டு அமாவாசை ஈறாக ஒன்பது நாளும் செய்யப்படுகின்ற நவராத்திரி பூசையே மகாபூசையாம். வருடம் உறும் சரற்காலந்தன்னில் எனக்கூட்டி வருஷருதுவை அடுத்து வருகின்ற சரற்காலம் எனப் பொருளுரைத்தலுமாம். வருஷம் - மழை. வருஷருது - மழைக்காலமாகிய ஆவணி புரட்டாசி மாதங்கள். சரற்காலபூசை வருஷபூசை என இரண்டாகக் கொண்டு வங்காளத்தில் செய்யும் துர்க்கோத்ஸவம் சரற்கால பூசையென்றும், எல்லாவிடங்களிலும் செய்யும் நவராத்திரிபூசை வருஷபூசை யென்றும் கூறுவாரும் உண்டு. (9)

என்மான் மியங்கேட் பவர்சுயங்க ளடைவர்
பயத்தை யென்றுமுறூர், அன்னோர் குலமுந் தழைத்
தோங்கு மரிய சாந்தி கன்மத்திற், றுன்னுங் கொடிய
சொப்பனத்திற் சொல்லுங் கிரக பீடையிலும்,
கொன்னூர் சரிதங் கேட்டிடுவ ரறிவு மிகுநற்
குணத்தோரே.

கு - ரை:- என்றும் உறூர் - எப்பொழுதும் அடையமாட்டார், சாந்திகன்மம் - துன்ப நீக்கத்தின் பொருட்டுச் செய்யுங் கருமங்கள், கொன் ஊர் - பெருமை பொருந்திய. (10)

கொடிய கிரக பீடையுப சருக்கங் கொடியர் பல
பூதம், வெடிசெய் மண்ணை யாதிகளும் மிக்க வெனது
மான்மியத்தைப், படனஞ் செய்ய நசித்திடுமாற் படிப்
போர்க் கென்னை வெளிப்படுத்தும், கடவு ளோரே
பலிகுசுமங் கந்தந் தீபந் தூபமுடன்.

கு - ரை:- உபசருக்கம் - மாகாமாரியின் உபத்திரவங்கள். கொடியர் பலம் - துஷ்டர்களுடைய வலிமை, வெடிசெய் - அச்சத்தைத் தருகின்ற. மண்ணை ஆதிகளும் - பேய் முதலிய வற்றாலே படுகின்ற துன்பங்களும், படனம் செய்ய - படிப்பத னால், நசித்திடும் - பலங்குன்றி அழிந்துபோகும், வெளிப்படுத் தும் - பிரத்தியட்சமாக்கும், கடவுளோரே - தேவர்களே, பலி - பலி பதார்த்தம்; அன்னமுமாம், குசுமம் - மலர், கந்தம் - சந்தனம் முதலிய வாசனைப் பொருள்கள். "சந்தன மகிலினோடு தகரங் குங்குமமே கோட்டம்" சூடாமணி நிகண்டு, பலி...-தூபமுடன் "குசுமந் தூபகந்தமாதி பொருளாற் பூசித்து" 12 அத் 21 செய். இதுவும் அடுத்த செய்யுளில் முடிவுபெறுகின்றது. (11)

ஒளியா ரட்டாங் கத்தாலு மோமத் தாலும் விப்பி ரர்க்கே, யளியா லளிக்கு மூணவாலுந் தானத் தாலு மிரவுபகற், களியா லெனக்குப் புரியபிடே கத்தாற் கட்டு மலராதி, விளியா விவித போகத்தா லோர்வற் சரத்தி னளிமேவும்.

கு - ரை:- ஒளி ஆர் - சிறப்புப் பொருந்திய, விப்பிரர் - அந்தணர், அளி - அன்பு, தானம் - சற்பாத்திரர்களாயுள்ள பெரியோர்களுக்குப் பொன் பசு முதலிய பொருள்களைப் புண்ணியநதிக்கரைகளில் நீர்வார்த்துக் கொடுத்தல், களியால் - மகிழ்ச்சியுடனே, புரி - செய்கின்ற, அபிடேகத்தால் - பஞ்சா மிர்தம் முதலிய அபிடேகங்களால், கட்டுமலர் ஆதி - பூமாலை முதலிய, விளியா - கெடாத, விவித போகத்தால் - மற்ற பல வகையான சுகானுபவங்களை உண்டாக்குதலினாலும், ஓர் வற் சரம் - ஓராண்டு, அளி மேவும் - என்கருணையுண்டாகும்.

வி - ரை:- அட்டாங்கம்: ஜலம் பால் தர்ப்பை தயிர் அட்சதை எள் யவம் வெண்கடுகு. மேற்செய்யுளில் கூறிய பலி முதல் விவிதபோகமீறாகியவற்றால் தேவியைப் பிரீதிசெய்தால் அவற்றைச் செய்வோருக்கு ஒருவருடத்தில் தேவியின் கருணை உண்டாகும் என்பது கருத்து. கட்டுமலராதி விளியா விவித போகத்தால் என்றது கன்னியர்களைத் தேவியாகப் பாவித்துப்

பூமாலை முதலியவற்றாலும் மற்றைய ஆடையாபரணங்களாலும் சுகானுபவமுறச்செய்தல் என்பர். (12)

அன்ன வளியென் மான்மியத்தை யன்பா லோர் காற் கேட்பவர்பான், மன்னும் சிரவ ணத்தாலே பாவ மழியு நோயின்மை, துன்னு மரிகள் பயமணுகா தும் மான் முனியா லயனுற்சொன், மின்னு துதிகள் சுப மதியை யளிக்குங் காண்மின் மெய்யறிவீர்.

சு - ரை:- அன்னஅளி - பலிமுதலியவைகளால் என்னைப் பிரீதி செய்வதனால் ஓராண்டில் ஏற்படும் என்னுடைய அந்தக் கருணையானது. மன்னும் - உண்டாகும், சிரவணத்தால் - அடிக்கடி கேட்டலினால், நோயின்மை துன்னும் - ஆரோக்கியம் உண்டாகும். அரிகள் பயம் - சத்துருக்களால் ஏற்படுகின்ற அச்சம், உம்மால் - தேவர்களாகிய உங்களால், முனியால் - சுமேதச முனிவரால், மின்னுதுதிகள் - விளங்குகின்ற தோத்திரங்கள், சுபமதி - நல்லபுத்தி, அளிக்கும் - படிப்பவர்க்குக் கொடுக்கும்.

வி - ரை:- தேவர்கள் சொல்லிய தோத்திரங்கள் நாலாவது அத்தியாயத்திலுள்ள இரண்டுமுதல் முப்பது வரையிலும் உள்ள செய்யுட்களும், ஐந்தாவது அத்தியாயத்திலுள்ள ஐந்து முதல் இருபது வரையிலுமுள்ள செய்யுட்களும், பதினொன்றாம் அத்தியாயத்திலுள்ள இரண்டுமுதல் முப்பதுவரையிலு முள்ள செய்யுட்களும், சுமேதச முனிவர் சொல்லிய துதிகள் முதலத்தியாயத்திலுள்ள இருபத்தேழு முதல் இருபத்தொன்பதாவது வரையிலுமுள்ளசெய்யுட்களும், பிரமதேவர் சொல்லிய துதிகள் முதலத்தியாயத்திலுள்ள முப்பத்தைந்து முதல் நாற்பத்து நான்காவதுவரையிலு முள்ள செய்யுட்களுமாம். (13)

மேவுஞ் சத்தாம் புருடர்சபை மிக்க பெருமை யுடை யானுந், தேவர் குழுவே பாலருறுஞ் சீற்றப் பீடை தீர்ந் திடுமாற், பூவின் மனுடர் சங்காத பேதந் தன்னிற் புணர்ப்பாக்குந், தேவி சரித சிரவணத்தாற் றிதியின் சுதர்பூ தாதிபயம்.

கு - ரை:- தேவர்குழுவே தேவிசரித சிரவணத்தால் எனக் கூட்டுக. சத்துமேவும் புருடர்சபை - நல்லறிவைப் பெற்றிருக்கின்ற மேலோர்களின் கூட்டம். ஆம் - ஆவர்ன். பாலர் உறும் சீற்றப்பீடை - குழந்தைகளை அடைகின்ற உக்கிரமாகிய பூதனை முதலிய பாலகிரகபீடைகள். பூவில் - பூமியில், மனுடர் - மனிதர்களுக்குள் ஏற்படுகின்ற, சங்காத பேதம்தன்னில் - மித்திர பேதத்தில்; நண்பர்களுக்குள் பகைமை ஏற்பட்டால், புணர்ப்பு ஆக்கும் - நட்பினை உண்டாக்கும். பூதாதிபயம் - பூதமுதலிய வற்றால் ஏற்படுகின்ற அச்சம், தூரத்தோடும் என அடுத்த கவியில் முடிவு பெறுகின்றது.

வி - ரை:- பூதாதிபயம் என்றதனால் பேய் விலங்கு பாம்பு திருடர் முதலியவற்றால் வரும் பயங்களும் உடன்கொள்க. (14)

தூரத் தோடு மாகவத்தி லெனது வலிமை சொலக் கேட்பிற், கோரப் பகைவர் பீதியிலே கொடிய வனத்தி லடைந்திடினு, நேருந் தாவம் வளைந்திடினு நெருங்கு வனவே ழம்முறினு, மாரு நிகள முற்றிடினு மரசர் கொல்வா னுரைத்திடினும்.

கு - ரை:- ஆகவம் - போரில், பீதி - பயம், நேரும் தாவம் வளைந்திடினும் - தானாகவே உண்டாகின்ற காட்டுத்தீச் சூழ்ந்து கொண்டாலும், வனம் வேழம் உறினும் - காட்டு யானைகள் எதிர்வந்தாலும், நிகளம் உற்றிடினும் - விலங்கு பூட்டப்பெற்றாலும், கொல்வான் - கொல்லும்படி, உரைத்திடினும் - கட்டளையிட்டாலும். (15)

இரணத் திடையி லரிகள்வளைந் திட்டா ரேனும் வாதத்தா, லரண மாக வளைவுறினு மலைசேர் கடல்வா யம்பிமிசைக், கரண மயங்கிப் பயமுறினுங் கடுஞ்சத் திரங்க ளேற்றிடினும், மூரணர் நோயா லுட்கிடினு மூர்க்கன் சிங்கம் புலிசோரன்.

கு - ரை:- இரணத்திடையில் - போர்க்களத்தின் நடுவில், அரிகள் - பகைவர்கள், வாதத்தால் - சுழல்காற்றினால், அரணம்

ஆக வளைவு உறினும் - மதிலைப்போல வளைத்துக்கொள்ளப் பட்டாலும், அம்பிமிசை - கப்பலில்இருக்கும்பொழுது, கரணம் மயங்கி பயம் உறினும் - (கடுங்காற்றினால் சுழற்றப்பட்டு) ஐம் பொறிகளும் கலங்கி அச்சமடைந்தாலும், சத்திரங்கள் ஏற்றிடினும் - (போரில்) வேல் முதலிய ஆயுதங்களை உடம்பில் ஏற்கும் பொழுதும், முரண் ஆர் - வலிமை பொருந்திய, நோயால் உட்கிடினும் - நோயின்வருத்தத்தால் அச்சமடையும்பொழுதும், மூர்க்கன் - துஷ்டன், சோரன் - திருடன்.

வி - ரை:- இதுவும் அடுத்தசெய்யுளில் முடிவுபெறுகின்றது. (16)

நள்ளார் முதலா யினர்புரியு நலிவு மெனது
தோத்திரத்தால், விள்ளா வெருவி யகலப்போம் விண்
ணோர் குழுவே விரைந்தகிலம், உள்ள துயருந் தீர்த்
தருள்வ லென்ன வும்பர்க் குரைத்தருளி, யள்ளார்
நயனி மறைந்திடலு மமரர் தந்த மில்லடைந்தார்.

கு - ரை:- நள்ளார் - பகைவர், நலிவு - துன்பங்கள், தோத்திரத்தால் - தோத்திரவடிவமாகிய சரித்திரத்தை நினைப்பதால், விள்ளா - விண்டு; விலகி, செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். அகலப்போம் - அகன்று நீங்கிப் போகும். அகிலம் - எல்லாவுலகங்களிலும், தீர்த்து அருள்வல் - தீர்ப்பேன், தன்மையொருமை வினைமுற்று, உம்பர் - தேவர்; மேலிடத்திலிருப்பவர். அள் ஆர் நயனி - காதளவும் ஓடிப்பரந்த கண்களையுடைய தேவியானவள், 'காதளவும் நீண்டவிழி' தனிச் செய்யுள், அள் - கூர்மையுமாம், இல் - இருப்பிடம். (17)

சுரலோ கத்தை யடைந்தமரர் துட்ட வசுரர் பய
மின்றி, யுரனார் தத்த மதிகார முளுற்றி வேள்வி யவி
யுண்டு, அரிகண் மாண்டா ரெனக்களித்தே யம்மை பாத
மிரவுபகற், பரிவா லிதைய மிசையிருத்திப் பரசி வணங்கி
வாழ்த்தினரால்.

கு - ரை:- உரன் ஆர் - வலிமை பொருந்திய. உளுற்றி - செய்துகொண்டு, வேள்வி அவி - வேள்வியிற் கொடுக்கப்பெறும்

அவியுணவு. அரிகள் - பகைவர்களாகிய அசுரர்கள், பரிவு - அன்பு. இதையமிசை - மனதில், இருத்தி - நினைந்து, பரசி - துதித்து. ஆல் அசை. (18)

சும்ப நிசும்பர் தமைத்தேவி தொலைப்ப மற்றை யசுரர்குழாங், கம்ப மடைந்து பாதாளக் கண்ணி லொளித்தா ரிவ்வண்ணம், வன்பார் பெருமைப் பகவதி யா மாயா தேவி சகமளித்த, லன்போ டளித்தன் ;மோக மதை யாக்க லவடன் வலியாமால்.

கு - ரை.- கம்பம் - நடுக்கம்; அச்சம். பாதாளக் கண்ணில் - தமது பழைய இருப்பிடமாகிய பாதாளவுலகத்தில், வன்பு - வலிமை, மாயாதேவி - விஷ்ணுமாயையாகிய தேவி: மாயையினின்றும் வேறுகாதவள். முன்னதாகிய அளித்தல் என்னும் சொல் படைத்தல் என்னும் பொருளிலும் பின்ன தாகிய அளித்தல் என்னும்சொல் பரிபாலித்தல் என்னும் பொருளிலும் வந்தது, சகம் - உலகிலுள்ள உயிர்களை, மோக மதை ஆக்கல் - மயக்கத்தை யுண்டாக்குதல், அவள் தன்வலியாம்- அத்தேவியினுடைய சாமர்த்தியமாம்.

வி - ரை:- அளித்தல் என்னும் சொல் படைத்தல் என்னும் பொருளில் வருவதை "தேவியளித்தல் பாலித்தல் திகழுமழித்தல் புரிபவளே" என்பதிற் காண்க. 11அக், 6செய். (19)

கருணை வடிவி விஞ்ஞானஞ் சித்தி வேண்டு மடியர் கட்கு, விரைவி லளிப்பன் மாகாளி மேவு மாகா லத் தன்னின், மருவு மாமா ரியினுருவாய் மன்னு வாளிவ் வண்டமெலா, மருளுங் கால மளிகால மழிக்குங் கால முச்சத்தி.

கு - ரை:- வி ஞானம் - மேலானதத்துவஞானம். சித்தி- காரியசித்தி. மாகாளி - பிரமன் முதலிய தேவர்களையும் அதி காரங்களில் வைத்திருக்கின்றவள் ஆகிய அந்த மகாகாளியே. மாகாலந் தன்னில் - பிரளய காலத்தில். மா மாரியின் உருவாய் மன்னுவாள் - அழித்தற் றெழிலின் வடிவமுடையவளாய்

306

இருப்பள். ''மஹாகாள்யா மஹாகாலே மஹா மாரீஸ்வரூபயா'' (முதனூல் 12-ம் அத். 35-ம் சுலோகம்). அருளுங்காலம் - படைப்புக்காலம்; அளிகாலம் - பாதுகாக்கின்ற காலம். முச்சத்தி - படைத்தற்சத்தி, காத்தல் சக்தி, அழித்தல் சத்தி. முச்சத்தி என்பது அவளேயாவள் என அடுத்த கவியில் முடிவு பெறுகின்றது

வி - ரை:- மா + அகாலம் = மாகாலம், மாகாளி - தாமதகுணப்பிரதானமுடைய சக்தி, மாமாரி என்பது மரணம் கஷ்டகாலம் என்னும் பொருளது என்பர், சங்காரசத்தியாம்.(20)

அவளே யாவள் பிறப்பிறப்பு மில்லா தவளு மவளே
யாம், அவளே செல்வ முறுங்கால மில்லிற் கமலை யாயமர்
வள், அவளே வறுமை யுறுங்காலங் கேட்டை யாகி
யமர்ந்திடுவள், அவளே குசுமந் தூபகந்த மாதி பொரு
ளாற் பூசித்து.

கு - ரை:- அவளே - அந்த மகாகாளியே. செல்வமுறுங்காலம் - செல்வம் உண்டாகின்ற காலத்தில், இல்லில் - வீடுகளில், கமலை - சம்பத்திலக்குமி. குசுமம் - பூ, இதுவும் அடுத்தகவியில் முடிவு பெறுகின்றது. இச்செய்யுள் சொற்பொருட்பின்வருநிலையணியாம். (21)

பத்தி யுடனே துதிப்பவர்க்குப் பாங்கார் தனமும்
பழிப்பில்லாச், சுத்த குணமார் புத்திரருந் துகளின் மார்க்
கந் தனிற் செல்லும், மெத்து சுபமார் மதிநீங்கா மிக்க
செல்வ மிகுமாயுள், வித்தை முதலாம் பெருஞ்செல்வ
மளிப்ப னென்றான் முனிவேந்தன்.

கு - ரை:- பாங்கு ஆர் - உரிமை பொருந்திய; பழிப்பு - பிறர்பழித்தல்; துகள் இல் மார்க்கம் - குற்றமில்லாத நன்னெறி. முனிவேந்தன் - சுமேதச முனிவன்.

வி - ரை:- நன்மக்களைப் பெறுவோர் இம்மையிலே அல்லாமல் இனிவரும் பிறப்புக்களிலும் தீயவை தீண்டாது

இன்புற்று வாழ்வாராதலின் 'பழிப்பில்லாச் சுத்த குணமார் புத்திரரும்' என்றார். "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங் காப், பண்புடை மக்கட் பெறின்" என்பது திருக்குறள். "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, நன்றின்பா லுய்ப்ப தறிவு" என்னும் தமிழ் மறைக்கேற்ப மனதைத் தீய வழியிலே போகவிடாமல் திருப்பி நல்வழியிற்கொண்டு செலுத்துவது நல்லறிவாம் ஆதலின், 'துகளின் மார்க்கம் தனிற்செல்லும் மெத்து சுபமார் மதி' என்றார். "கல்வியுஞ் செல்வமுமிருவகைப் பொருளே" எனச்செல்வத்தில் முதற்கண் வைத்துப் போற்றப் படுவது அதுவாதலினாலும் கேடில் விழுச்செல்வம் கல்வியாத லினாலும் கல்வியை 'முதலாம் வித்தைப் பெருஞ் செல்வம்' என்றாரென்க. (22)

உலக மாதா வெவ்விடத்து முறைவளவளை வணங் கியிடி, னலகில் சிவங்களேவருக்கு மூண்டாமென்ன வரசனுக்குங், குலவு குறங்குச் சாதனுக்குங் கோவார் முனிவன் பன்னிரண்டா, நலங்கொள் சருக்கத் தைத் தேவி நலமா ரருளாற் பகர்ந்தனனால்.

கு - ரை:- தேவி மக்கட்பிணியை யகற்றுந் தாய்போல உயிர்களுக்கு மலநோயைச் சிருட்டிமுதலியவைகளாற் போக்கு தலின், உலகமாதா எனப் பெற்றாள். "அன்னே யுலகுக்கு அபிராமியென்னுமருமருந்தே" என்பதும் ஈண்டுக்காண்க. சிவங் கள் - தன்மைகள், மங்கலம். "சிவநன்மைகுறுணிமுத்தி" என்பது சூடாமணி, ஏவருக்கும் - வணங்குகின்ற யாவருக்கும்; குறங்குச் சாதன் - வணிகன்; பிரம்மாவின் தொடையிற் பிறந்தோர் வணிக ராதலின், வணிகன் குறங்குச் சாதன் எனப்பெற்றான் "மன்னுந் தொடையில் வந்துதித்தார் வணிகர்" என்பது வாயுசங் கிதை. சாதன் - பிறந்தவன். இதன் பெண்பால் சாதை. 'கவுரி தன் களேபரத்தினில் சாதையாய்' என்பது 4-ம் அத்தியாயம் 36-வது செய்யுள். கோவார் முனிவன் - முனிவேந்தன். (23)

பனிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

இதனாற் சொல்லியது சொற்பொருள் உணர்த்தும்வழி இயல்பானுணர்த்துவதனையொழிய வடசொற்களாற் பிறவழியு நோக்கும் எனக் காலவழுவமைதிக்கிடையே இதுவும் ஓர் மரபு வழுவமைதி என்பது கூறியவாறாயிற்று. (சரு)

**வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்**
**எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையும் உடைத்தே.** (246)

என் - எனின், இதுவும் வினைச்சொல்லது பொருள்படும் வேற்றுமை உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: ஒருவன் ஓர் தொழிலினைச் செய்தானாகத் தன்னை ஒருவன் மனங்கொண்டிருந்தவழி தான் அது செய்யாமையான் மனத்து வலியுற வேண்டியது செய்திலேன் என எதிர்மறைப் பொருட்கண் வருகின்ற வினாவினையுடைய வினைச்சொல், அவ்வாறு தான் அது செய்யாமை உணர்த்து தற்கு நின்ற வினையும் உடைத்து என்றவாறு.

உம்மை, எதிர்மறுத்தான் அது செய்தானாகே உடன் பட்டமை அவற்கு உணர்த்துதற்கு உரிமை வினையும் உடைத்து என்றவாறு.

உ - ம்: கதத்தானாதல் களியானாதல் மயங்கி இன்னாங் குரைத்துப் பின் தெருண்டவழி, அவ்வின்னாங்கு உரைக்கப் பட்டான், 'நீ என்னை வைதாய்' என்றக்கால், 'யான் வைதேனோ' எனத் தான் வையாமையை வலியுறுத்தற்குக் கூறியதுதானே 'அப்பொழுது வைதேன்; நோகாதே' என்று நேர்ந்தமைப்பட நிற்கும்.

உம்மை எதிர்மறையாகலான் மறுத்தல் பெரும்பான்மை; நேர்தல் சிறுபான்மையெனக் கொள்க. அவ்வாறு பொரு ளுணர்த்துகின்ற தொடைக்கண் வினாவிடைச் சொல்லாகலான் அஃதாண்டைக்காராய்ச்சி யன்றோ எனின், அச்சொல்லெடுப் பானே வைதேன் என்னும் உடன்பாட்டு வினைச்சொல் வைதேனோ என ஒருவழி வைதிலேன் என்னும் எதிர்மறைப்

பொருள் பெரும்பான்மையாயும், ஒருவழி அம்மறைநிலையை விட்டுத் தன்னுடம்பாட்டுப் பொருண்மை சிறுபான்மையாயும் நின்றமையான் ஈண்டைக்கும் ஒருவழூஉவமைதி ஆராய்ச்சித்தா யிற்று என்பது. (சசு)

**வாராக் காலத்து வினைச்சொற் கிளவி**
**இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்**
**இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை. (247)**

என் - எனின், இயற்கை தெளிவு என்னும் பொருட்கண் எதிர்காலம், இறந்தகாலத்தோடும் நிகழ்காலத்தோடும் மயங்கு மாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: வாராக்காலமாகிய எதிர்காலத்துப் பிறக்கும் வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மை இறப்புக்காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் மிகத்தோன்றும்; யாண்டு எனின், ஒன்றனது இயற்கையினையும் ஒன்றனது தெளி வினையும் ஒருவன் சொல்லுங்காலத்து என்றவாறு.

இயற்கை என்பது, வழங்குங்கால் தான் ஒன்றனை இஃது இப்பெற்றியதாகும் என்று அறிந்திருந்த இயல்பு என்றவாறு. தெளிவு என்பது, ஒருநூல் நெறியான் இது நிகழும் எனக் கண்டுவைத்துத் துணிதல் என்றவாறு.

உ - ம்: இக்காட்டுள்போகின் கூறைகோட்படுவன் என்னாது இக்காட்டில் புகின் கூறை கோட்பட்டான் எனவும் கூறை கோட்படுகிறான் எனவும் கூறுதல்; இஃது இயற்கை. எறும்பு முட்டைகொண்டு தெற்றி ஏறுவது கண்டுழி மழைபெய்வதாம் என்னாது பெய்தது எனவும், பெய்கின்றது எனவும் கூறுதல்; இது தெளிவு. இதுவுஞ் சொல்லொடு சொன்மயக்கம். (சஎ)

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே. (248)**

என் - எனின், இதுவும் வினைச்சொற்கண் நிகழும் மரபு வழூஉவமைதி கூறுதல் நுதலிற்று.

இ - ள்: பிறிதொன்றனுன் ஒருதொழில் செய்யப்படுவதாகிய பொருளினைத் தான் அத்தொழிலினைச் செய்ததுபோல அத்தொழில் அதன்மேற்படக் கூறுதலும் வழக்கின்கண்ணே நடக்கும் முறைமை உடையதாம் என்றவாறு,

உ - ம்: இல்லம் மெழுகிற்று, சோறு அட்டது எனவரும்.

இனி ஒன்றெனமுடித்தல் என்பதனுல் இவ்வாள் எறியும். இச்சுரிகை குத்தும் எனச் செய்தற்கு உடனாகிய கருவியைத் தான் செய்ததாகச் சொல்லுவதும், அரசன் எடுத்த ஆலயம் என்றாற்போல ஏவினானைக் கருத்தாவாகச் சொல்லுவதும் அமைத்துக்கொள்ளப்படும் எனவே; கருத்தாக் கருத்தாவும், ஏதுக் கருத்தாவும், கருவி கருத்தாவும், கரும கருத்தாவும் என நான்கு வகைப்படூஉம் என்பதும், அவற்றுள் இது கருமகருத்தா என்பதும் பெறப்பட்டது.

இன்னும் இதனானே உண்டல், தின்றல் என்னுந்தொழில் தன்னையும் உண்டது, தின்றது என்று கருத்தாவினைப்போலக் கூறும் வாய்பாடும் கொள்க. (சுஅ)

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி. (249)

என் - எனின், மேற்கூறிய கால மயக்கம் ஒவ்வொரு பொருண்மையைக் குறியாது பல பொருட்கண்ணும் மயங்குவன வற்றுள் இறந்தகாலம் எதிர்காலத்தோடு மயங்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: இறப்பும் எதிர்வும் என்று சொல்லப்பட்ட அவ்விரு காலமும் மயங்குஞ்சொல்லாகிய சொற்களிடத்து மயக்கமாய்த் தோன்றும் என்றவாறு.

உ - ம்: யாம் பண்டு விளையாடுவது இக்கா; யாம் பண்டு சூது பொருவது இக்கழகம் என வரும். (சுகூ)

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார். (250)

என் - எனின், இதுவும் அப்பொருட்கண் இறந்ததனோடு நிகழ்வது மயங்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: ஒழிந்த நிகழ்காலம் இறந்ததனோடு மயங்குதலை நீக்கார் ஆசிரியர் என்றவாறு.

உ - ம்: யாம் பண்டு விளையாடுங் கா எனவரும். இனி ஒன்றெனமுடித்தல் என்பதனால் இறந்ததனோடு எதிர்வது நிகழ்வது மயங்கியவாறுபோல நிகழ்வதனோடு இறந்ததும், எதிர்வும் எதிரதனோடு இறந்ததும் நிகழ்வதும் மயங்குமாறு கொள்க. யாம் இன்று விளையாடாநின்றது இக்கா என்புழி விளையாடிற்று எனவும் விளையாடுவது எனவுங் கூறுதல் நிகழ்கால மயக்கம். யாம் நாளை விளையாடுவது இக்கா என்புழி விளையாடிற்று எனவும், விளையாடாநின்றது எனவுங்கூறுதல் எதிர்கால மயக்கம்.

இவை இத்பொழுதை வழக்கினுள் ஏலா எனினும் இவ்வாறு மயங்குதற்கு இலக்கணம் உண்மையானும், க ச த ப முதலிய என்புழிச் சொல்லுமுறை என்பதனைச் சொல்லிய முறைமை என்றமையானும் அமையும் எனக்கொள்க (௨௫௰)

## 7. இடைச்சொல்லியல்

**இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்**
**நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே. (251)**

இவ்வோத்து என்னை பெயர்த்தோ எனின், இடைச்சொல் லிலக்கணம் உணர்த்துதலான் இடைச்சொல்லோத்து, என்னும் பெயர்த்து. இடைச்சொல் என்னும் பொருண்மை என்னை யெனின், பெயர் வினைகள் உணர்த்தும் பொருட்குத் தான் இடமாக நிற்றலான் இடைச்சொல்லாயிற்று

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், இடைச் சொற் கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்தல்நுதலிற்று.

இ - ள்: இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயர்ச் சொல்லோடும் வினைச்சொல்லோடும் வழக்குப்பெற்று நடக்கும்; அவ்வாறு அவற்றோடு நடத்தலல்லது தாமாக நடக்கும் இயல்பில என்றவாறு.

உ - ம்: அது மன், வருகதில் அம்ம எனவரும்.

தமக்கியல்பில என்றதனன் பெயரொடும் வினையொடும் அவ்விடைச் சொற்கள் வருவழிச் சொற்புறத்தவழி வருதலும் சொல்லுள்வழி வருதலும் என் இருவகைத்தென்பது பெறப் பட்டது.

உ - ம்: வருகதில், உண்டான் எனவரும்: இவை வினை. அதுமன், மற்றையது எனவரும்: இவை பெயர். மற்று இச்சூத் திரத்தின் பொருண்மையும், இலேசின் பொருண்மையும் "இடைச் சொல் கிளவியும், உரிச்சொல் கிளவியும்" என்ற சூத்திரத் துள்ளும் அதன் இலேசினுள்ளும் அடங்குமால் எனின், அது நிரனிறை வாய்பாட்டதாகலாற் பெயரெனப்பட்டு வருமென்றும் வினையோடு உரிவருமென்றும் கொள்ளக் கிடந்தமையின், இடையும் இரண்டோடும் வருமென்றற்குக் கூறினர் என்பது. இனி அவ்விலேசு நிரனிறைச் சூத்திரத்ததாகலாற் புறத்துவழி வருதல் இடைச் சொற்காகவும் உள்வழி வருதல் உரிச்சொற் காகவுங் கொள்ளக்கிடக்கும் என்பது கருதி, ஈண்டும் இருவகை யானும் இடைவரும் என்பதற்கு இலேசுகூறினர் போலும். (க)

அவைதாம்,
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பின் பினவே நுவலுங் காலை. (252)

312

என் - எனின், அவ்விடைச்சொற்களின் பாகுபாடாமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: மேல் இடைச்சொல் என்று சொல்லப்பட்டவை தாம் இரு மொழி தம்மிற் புணர்தலியன்ற நிலைமைக்கண் அவற்றின் பொருணிலைமைக்குதவிசெய்து வருவனவும், வினைச் சொற்களை முடிக்குமிடத்துக் காலங்காட்டும் இடைச்சொற்க ளோடு கூடித் தாம் பால்காட்டுஞ் சொற்களாய் வருவனவும், வேறுபாடுசெய்த பொருண்மையிடத்து வேற்றுமையுருபாய் வருவனவும், வழக்கின்கண் தமக்கு ஓர் பொருளன்றித் தாம் அடைந்த பெயர் வினைகளை அசையப்பண்ணி நிற்கும் நிலைமைய வாய் வருவனவும், பெயர்ப் பொருளிடத்துப் பொருளின்றி ஓரோர் அசையை நிறைத்தற்பொருண்மையவாய் வருவனவும், பெயர்வினைகள்போல விளங்கப் பொருளுணர்த்தாத சொற்கள் தம்குறிப்பானே ஒருபொருளை உணர்த்தி வருவனவும், ஒத்த என்னும் வாய்பாடு தன்கண் நில்லாத கூற்றானே நின்ற ஒப்புமைப் பொருண்மையை உணர்த்தி வருவனவும் என்று சொல்லப்பட்ட அவ்விலக்கணங்களை உடையனவாம், அவற்றைச் சொல்லுங்காலத்து என்றவாறு.

புணர்ச்சிக்கண் வருவன எழுத்தோத்தினுள் 'இன்னே வற்றே' யென்னும் சூத்திரத்தான் ஓதப்பட்டன. இனித் தன்னினமுடித்தல் என்பதனான் காரம், கரம், கான் என்னும் எழுத்துச் சாரியையுங் கொள்ளப்படும்; வினைச்சொற்கள் பால்காட்டி வருவன வினையியலுள், 'அம் ஆம் முதலாக' ஈறுபற்றி ஓதினவெல்லாம் எனக் கொள்க.

இனி அவ்வினைச் சொற்கள் 'காலமொடு வருநவும்' என்ற தனால் காலங்காட்டி வருவன உண்டான் என்புழி இடைக்கண் டகாரமும், உண்ணா நின்றான் என்புழி ஆநின்றும் உண்பான் என்புழிப் பகரமும் அத்தன்மைய பிறவும் எனக்கொள்க. காலம் உணர்த்தி வருதலான் அவை காலம் எனப்பட்டன. உண்டான் என்பழிக் காலங்காட்டும் டகரத்துடனே பால் காட்டும் ஆன் வந்தவாறு அறிக. இவ்வாறு பாலும் காலமும்

காட்டுவன வினைக்கென்றோதினும் அதனைப் பெரும்பான்மை யாக்கி உண்டவன் என்றாற்போல் பெயர்க்குக் கொள்க.

இனி ஒன்றென முடித்தல் என்பதனால் வினைச்சொற்கண் பாலுணர்த்துவனவேயன்றிப் பெயர்க்கே உரிய வாய்பாட்டால் உணர்த்துவனவுங் கொள்ளப்படும். அவை நம்பி, நங்கை என்னும் இகர ஐகார ஈறுபோல்வன எனக்கொள்க.

வேற்றுமை யுருபாய் வருவன வேற்றுமை யோத்தினுள் 'அவைதாம் பெயர் ஐ ஒடு கு' என்னும் சூத்திரத்துப் பெயர் ஒழிந்த ஏழும் எனக்கொள்க. இவற்றை ஒத்துடைவுபற்றி முன் கூறுதது வினைக்கண் வருவன பெரும்பான்மையாகல்பற்றிப் போலும். மற்றைய அசைநிலையும், இசை நிறையும், குறிப்பிற் பொருள்செய்குநவும் இவ்வோத்தினுள் தத்தம் சிறப்புச் சூத்திரத்துள்ளே உதாரணங் காட்டப்படும். ஒப்பில் வழியாற் பொருள்செய்குநவற்றிற்கு இதன் பின்னதிகாரத்து உவமை யியலுள் காணப்படும்.

இச்சூத்திரத்து முன்னைய மூன்றும் முன்னர் ஓதிப் போந் தனவாகலான் முன் வைக்கப்பட்டன. பின்னையது பின் னதிகாரத்துக் கூறலால் பின் வைக்கப்பட்டது. இடையன இவ் வோத்தினுள் கூறப்படுதலான் இடைநின்றனவாயின. இடைக்க ணின்ற மூன்றனுள்ளும் பொருள்செய்வதனை முன் சொல்லாது அசைநிலை இசைநிறைகளை முன் சொல்லியது என்னை எனின், இவை இரண்டும் ஒழிய ஈற்றின் முன்னும் பின்னும் நின்றவை யெல்லாம் பெரும்பான்மை இவையாய் நிற்றலானும் இவைதாம் அவையாய் நிற்றலானும், இவைதாம் அவையாய் நிற்றல் சிறு பான்மையாகலானும் என்பது. (உ)

**அவைதாம்,**
**முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்**
**தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்**
**அன்னவை எல்லாம் உரிய என்ப. (253)**

315

என் - எனின், இன்னும் அவற்றிற்காவதோர் விதியுணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: மேல் வகுக்கப்பட்டவைதாம் முன்னிடத்தும் பின்னிடத்தும் பெயர்வினையாகிய மொழிகளை அடைந்து வருதலும், அச்சொற்கள் தம்மீறு ஒருவழி எழுத்து வேறுபட்டு வருதலும், மற்றோர் இடைச்சொல் தான் நிற்குமிடத்தே நிற்றலுமாகிய அத்தன்மையை யுடைய இலக்கணம் எல்லாவற்றிற்கும் இலக்கணமாதற்குரிய என்றவாறு.

உ - ம்: முன்னடுத்தது: அதுமன், கேண்மியா என்பன; பின்னடுத்தது: கொன்னூர், ஓஒதந்தார் என்பன. ஈறு திரிந்தது. மன்னைக் காஞ்சி, இஃதொத்தன் என்பன. பிறிதவணிலையல்: மகவினை, மடவை மன்றம்ம என்பன. (௩)

மன்னைச் சொல், தில்லைச்சொல் என்பனவோ எனின் அவை பொருளுணர்த்தாது சொல் தம்மை உணர நின்றவாகலான் ஈண்டைக்கு ஆகா என்பது. மற்றென்னை திரிபு பெறுமாறு எனின், உடம்பொடு புணர்த்தல் என்பதனான் அவற்றை இவ்வாறு ஓதிய சூத்திரங்களால் பெறுதும் என்பது.

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (254)

என் - எனின், இது தத்தங்குறிப்பிற் பொருள்செய்குநவற்றுள் ஒன்றன் பொருட்பாகுபாடு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்- கழிவு பொருண்மைக்கண் வரும் மன்னும் ஆக்கப் பொருண்மைக்கண் வரும் மன்னும் ஒழியிசைப் பொருண்மைக் கண்வரும் மன்னும் என மூன்று கூற்றதாம் என்ப மன்னென்னும் சொல்லது பொருட்பாட்டு வேற்றுமை என்றவாறு,

உ-ம்: 'சிறியகட் பெறினே யெமக்கீயுமன்னே' இது கழிவு. பண்டு காடுமன்; இஃது ஆக்கம். பண்டு காடு என்பதன்றோ இன்று நாடு என்று ஆக்கமுணர்த்துகின்றது எனின், அதன் பொருளை இதுவுங்கூடிநின்று உணர்த்திற்று என உணர்க. இவ்

என்பதனால் உணர்க. இங்ஙனம் இவ்வாறு கூறுந் தத்துவங்க டோற்றியவாறே ஒடுங்குமென்பது திருமந் திரத்தில்,

> ஐயைந்து மான்மாவி லாறோ டடங்கிடும்
> மெய்கண்ட மேன்மூன் *றடங்கும் வியோமத்திற்
> கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
> எய்யும் படியடங் குங்காலேழ் எய்தியே. (2239)

என்பதனால் அறிக. நாலேழிருபத்தெட்டென்றது வேதாந்த தத்துவத்தை. இது முன்னர் சொல்லிய "வையமைந்துளாகுங் குறிக்கிலே" என்றாற்போல ஈண் டும் அடங்குவகைகூறியது. இவ்வாறு ஞானசித்தியிலும்,

> तत्वनिर्णयसिद्धान्तं शृणु हैमवतीश्वरि ।
> आत्मतत्वं चतुर्विंशदात्ममध्ये लयोदितम् ॥
> विद्यातत्वं तथा पञ्च मायामध्ये लयोदितम् ।
> शिवतत्वं तथा पञ्च नित्यं सत्यस्य साधनम् ॥
> शुद्धविद्येशसादाख्यं बिन्दुनादे लयोदितम् ।
> बिन्दुनादं द्विधा तत्वं कुटिलीमध्ये लयोदितम् ॥
> कुटिली कुण्डली बिन्दुरिच्छा ज्ञानक्रियोदितम् ।
> इच्छाज्ञानक्रियाशक्तेः सर्वत्र जगदुद्भवम् ॥
> इच्छाज्ञानक्रियाशक्तिः पराशक्ति लयोदितम् ।
> परापरविधाशक्तिः शिवतेजोमयोदितम् ॥
> शिवमत्यन्तसंभिन्नं जातनाशविनाशनम् ।
> अणौ महति तद्व्याप्तं सर्वात्मनां लयः प्रभुः ॥
> जगच्छक्तिमयं व्याप्तं जगच्छक्तिमयं शिवम् ।
> जगदुत्पद्यते शक्तेः शक्तेस्तु परमः शिवः ॥
> एवं तत्वलयं सूक्ष्ममेकं तत्वप्रवर्तकम् ।
> एवं तत्वविधानोक्तमेवं तत्वस्य निर्णयम् ॥

என வருமாற்றானுமுணர்க. ஈண்டு உதாகரித்த திரு மந்திரத்தில் "ஐயைந்து மான்மாவில்" என்றது இத்

* 'மேவுமெய் யோகத்தில்' என்பது அச்சுப்பாடம்.

தந்திரத்திற் புருட தத்துவங்கூட இருபத்தைந்து நாலு மான்மாவிற் றோன்றி யொடுக்கு மாற்றால் என்க. இதனால் கலையிற் பிரகிருதி தோன்றி யொடுங்குமென்பதும் கூடுமென்க.

आत्मतत्वं चतुर्विंशदात्ममध्ये लयोदितम् ।

என்பதனாலும் விளங்கும். இதுபோல வித்தியா தத்துவ மாற......... மாயையி லொடுங்குமாகலின்,

विद्यातत्वं तथा पञ्च मायामध्ये लयोदितम् ।

எனக்கூறுதலின் "ஆறோட டங்கிடு மெய்" (திருமந்-2239) யென்றது. ஈண்டு மெய்யென்றது மாயாதனு. அதனை மாயையாயுபசரித்தது. அந்த மாயையே கண்டமெனலின் கண்டமேலாவது மாயையின் றோற்றஞ் செய்த சுத்த வித்தை. அதின் மாயை யொடுங்குமென்க. "மூன்றடங்கும் வியோமத்தில்" என்றது தோன்றிய வாறே ஒன்றிலொன்று சென்று.........மாகிற சத்தியில் அடங்கும். கைகண்ட சத்தி சிவத்தில்; அது பரத்தில் என்க. அது,

ஐயைந் தொடுங்குமவ் வான்மாவி லான்மாவு
மெய்கண் டிடுஞ்சுத்த வவத்தையில் வீடாகுந்
துய்யவவ் வித்தை முதன்மூன்றுந் தொல்சத்தி
யைய சிவன்சத்தி யாந்தோற்ற மவ்வாறே. (2238)

என உற்பத்திக்கும் ஒடுக்கத்துக்குங் கூறிய திருமந்திரத்தாலும் உணர்க. இக்கருத்தானே மேற் சித்தாந்த குரவரும்,

தத்துவமெண்மூன் றுஞ்சென் றான்மதத் துவத்தொடுங்கும்
வித்தையி னொடுங்கு மாறு சிவத்தினி னொடுங்கு மூன்றும்
வித்ததத் துவமிம் மூன்று மென்பர்கள் இரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொ டுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்.
—சித்தியார். சுபக். 162.

என்றதூஉம். இதனானே,

உற்றமுப் பாலொன்று மாயா ளுதயமா
மற்றைய மூன்று மாயோ தயம்விந்து
பெற்றவள் நாதம் பரையிற் பிறத்தலால்
உற்ற பரசிவன் றெல்லிளை யாட்டிதே. (399)

என்று வந்த திருமந்திரத்தில் மாயைக்குஞ்சுத்தவித்தை காரணமென்று கூறியதாய்க்கொண்டு மாயையொன்றே அதோ பாகம் அசுத்தமாகவும் உத்தரபாகம் சுத்த மாயுமிருக்கும்; கண்ணாடியின் பின் முன் புறம் வேறு யிருந்தாலுங் கண்ணாடி ஒன்றாய் இருந்தாற்போல. அது தத்துவ தீபிகையில்,

சுத்தமா மாயை தன்பாற் றோன்றிய பேதஞ் சொன்னோ
மத்திம மாயை தன்பால் மற்றுள தத்து வங்கேள்
அத்தனே யிரண்டோ மாயை யன்றுகா ணவத்தா பேத
மெத்தன்மை தற்ப ணத்தி லிருபுறம் போலு மன்றே.

என வருமாற்றானுமுணர்க. இதனானேயன்றே சித்தாந்தக்குரவரும் "விந்துவின் மாயை யாகி மாயையி னவ்வியக்தம் வந்திடும்" (சித்தி, சுபக். 39) என்றதூஉம். இவ்வாறே,

தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி யதன்மு தற்றான்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசையா மெல்லாஞ்
சாலவின் றாகு மான்மாச் சிவத்தினைச் சார்ந்த போது.
—சித்தி, சுபக். 140.

என்பதற்கும் பொருள்கொள்க. ஈண்டு அதன் முதற்றா னென்றது சுத்தவித்தையை. அதுவே அதற்கு மேல தாகலின். விந்து என்றது சுத்த வித்தைமுதன் மூன்றும். இந்த விந்துவிற்கு மிசை சத்திசிவ மிவை யென் பதனாற் றோன்றும் அவ்வாறு தோற்றம் கூறுமாற்றா னுந் தோன்றுமாகலின். அதன் முதற்றான் மேலதாம்

என மாயைக்கு மேற் சுத்தவித்தை என்றது மூட்டு மோகினி சுத்தவித்தை..........மலரெட்டே யென்பத னானும் விளங்கும். அவ்வாறு மெய்கண்டிடுஞ் சுத்த வித்தையில் வீடாகும் என்பதனாலும் வெளி.

ईश्वराच्छुद्धविद्या स्यात्ततो मायासमुद्भवः ।

என்னும் சுவச்சந்தாகமத்தாலும் காண்க. இனி ஞான சித்தியில்,

मूलप्रकृतिरव्यक्तं व्यक्तं चित्तं महान्त्रिधा ।
पुरुषः पञ्चकञ्चुकः । इत्यर्थं तत्वमुद्भवम् ।
मूलप्रकृतिरव्यक्तं चित्तं व्यक्तं महान्त्विधा ।
पुरुषः कञ्चुको बुद्धिरष्टप्रकृति तत्त्वकम् ॥
अष्टप्रकृतयस्तत्वसूक्ष्मपुर्यष्टकं (तथा) ।

எனவும் கூறியவாற்றால் புருஷதத்துவத்தில் இருபத்து நாலு மடங்குமென வந்ததுபோல மாயை சுத்த வித்தை யில் ஒடுங்குமென்பதற்கு வந்ததுண்டோ எனின் திரு மந்திரத்தில் அவ்வாறு "மெய்கண்டிடுஞ் சுத்த வித்தை யில் வீடாகும்" என்பதனால் உண்டென்க. அன்றி அதற்கு மூலாகமங்களிலும் உண்டென்க. இதனானே யன்றே பின்னும் ஓரிடத்து,

வேறாங் குணத்தோ டையைந்தும் புருடனி
லீறாகு மாறா மிருஞ்சுத்த வித்தையி
னீறாகு மைந்தும் நிலைநின்ற தத்துவம்
பேறாகுங் கேவலம் பெற்றதுந் தானே.

எனத் திருமந்திரம் வந்ததூஉம். இனி ஞானசித்தியில்,

बिन्दुशक्त्युद्भवं माया मोहिनी मोहकारणम् ।

என்றவாறே சித்தாந்தக் குரவரும் "விந்துவின் மாயை யாகி" (சித்தி. சுபக். 39)எனத் தோற்றங் கூறுதலான் ஒடுக்கமும் விந்து வினிடத்திலென்று கூறுவான்

"மோகினி அதன் முதற்றான் மேலதாம் விந்து" வென்றதெனினுமாம். அன்றி,

क्षित्यादिकुटिलान्तानि षट्त्रिंशत्तत्त्वरूपकम् ।
शिवेच्छया कुटिलोत्पन्नं नादतत्त्वं प्रधानकम् ॥

என ஞானசித்தியிற் கூறுதலின் மாயைக்குக் குடிலையி னுற்பத்தி கூறியது. சுத்தத்தைக் குறித்து அசுத்தம் அப்பிரதானம் என்று தோன்ற மாத்திரமாகலினிரண்டு மாயையுங் கண்ணாடி யுள்ளும் புறமும் போன்றிருத் தலின் அசுத்தத்துக்குஞ் சுத்தத்திற்குப் போல் ஒடுக்கங் கூறவேண்டாவெனினுமாம். இதனானேயன்றே ஞானசித்தியிற் றத்துவவொடுக்கங் கூறும்வழி,

विद्यातत्त्वं तथा पञ्च मायातत्त्वे लयोदितम् ।

என்று மாத்திரம் கூறி மாயைக் கொடுக்கங் கூறாதது மாம். ஆகவே "மூலமோகினி யதன்முதற்றான் மேல தாம் விந்து" வென்றதும் பிரதான அப்பிரதானந் தோன்றக் கூறிய தெனினுமாம். இவ்வாறு பிரேரக பிரேர்ய பாவத்தாற் கூறியதென்பாருமுளர். இனி இச்சுத்தசைவத்தில் வேதாந்தங் கூறுவது குறித்து பிரகிருதியைப் பிரதானமாக்கியுஞ் சித்தாந்தங் கூறுதல் குறித்து அசுத்தமாயை........தோன்றவிவை இரண்டு கண்டமாக்கியுமாக மூன்றுகண்டமுந் தனித்தனி கூறு மிடமும் உண்டு. அது திருமந்திரத்தில்,

அசுத்த மளாவோடு சுத்தம தாக
விசைத்த..........மூன்று மாணி
னிசைத்திடு மாயையி னீள்குண் டலியி
னசைத்த பரையா லடங்குவ தாமே.

என வருமாற்றான் உணர்க. இதனானு மாயைக்கொடுக்க மில்லை என்பது தோன்றும். ஆயின் சித்தாந்தக் குரவர் "சிவமிவை மிசையா" மென்றதன்றிச் சுத்த தத்துவ மைந்திற்கும் ஒடுக்கங் கூறு்தென்னெனின் முன்னர்,

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்க ளைந்தும்
சுத்ததத் துவம்சி வன்றன் சுதந்தர வடிவ மாகும்
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே.

—சித்தி. சுபக். 86.

என்று கூறியவாறே ஞானசித்தியிலும்,

शिवतत्त्वं तथा पञ्च नित्यं सत्यस्य साधनम् ।

என வருதலின். நித்தியமென்றமையின் விந்து மோகினிக்குப்போல இவ்வைந்திற்கும் ஒடுக்கங் கூறுதென்க.

"சத்திசிவமிவை மிசை" யென்றதனுனே கீழ் மூன்றுள் தோன்றுதலின் ஐந்தும் கூறியவாருயிற்று. "எல்லாஞ் சாலவின்ருகு மான்மாச் சிவத்தினைச் சார்ந்த போதெ"னவே சாராத பெத்த காலமெல்லாத் தத்துவங்களும் ஆன்மாவிற்குப் பெந்தமென்பது தோன்றும். அது சங்கார காலத்துஞ் சிவன் சூட்சும பஞ்சகிருத்தியம் பண்ணுதலின் அவன் இச்சா ஞானக்கிரியை சூட்சும வியாபாரத்திற் பிரவிர்த்திக்குமாகலின் அதனுற் சுத்த மாயா காரியமான பஞ்ச தத்துவங்களு மங்கு முண்டாகலிற் காலநீங்கிய நிலைமையானித்தமென்றதெனினுமாம். அது,

ஞானமே யான போது சிவந்தொழில் ஞான மொக்கின்
ஈனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறின்
ஊனமேற் கிரியை வித்தை யுருத்திர னிலைய போகம்
ஆனபே ரதிகா ரத்தோ டதிகர ணத்த னுமே.

—சித்தி, சுபக். 85.

என்பதனுல் உணர்க. ஈண்டுக் கூறிய ஞானமும் கிரியையும் சிவனதே; யான்மாவினதன்று. சிவனே தத்துவஞ் சிருட்டிப்பதாகலின். அது "உருத்திரனிலய போக" மென்பதனுலும் பெறப்படும். இவ்வாறு திருமந்திரத்திலும்,

ஞானங் கிரியை சமபாத நாதன்பால்
.....ன்கிரியை சிவயோக மைந்திவை
மேலநந் தியநாதம் விந்துச் சதாசிவன்
தானந்தி யீசன்றன் சுத்த வித்தையே.

என வரும். அன்றிச் சத்திசிவ மிவையம் மூன்றிற்கு மேலாமெனக் கூறி யம்மூன்று தத்துவமு நாதவிந்துக் களில் அடங்குமெனினுமாம்.

शुद्धविद्येशसादाख्यं बिन्दुनादे लयोदितम् ।

என ஞானசித்தி கூறுதலின். இரட்டுறமொழிதலாற் சத்திசிவ மிவ்விரண்டும் மிசையா மென்றதற்கு இவ் விரண்டு தத்துவமுங் குடிலையில் அடங்குமெனினுமாம். அவ்வாறு,

बिन्दुनादं द्विधा तत्वं कुटिलामध्ये लयोदितम् ।

என ஞானசித்தி கூறுதலின். இவ்வாறு சித்தாந்தக் குரவர் கூறியதூ மீண்டொத்தது. அது,

தத்துவ மெண்மூன் றுஞ்சென் றுன்மதத் துவத்தொ டுங்கும்
வித்தையி னொடுங்கு மாறு சிவத்தினி னொடுங்கு மூன்றும்
மித்தகத் துவமிம் மூன்று மென்பர்க ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொ டுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்.

என்பதனானும் விளங்குமாறு; சுத்த வித்தையில் வித்தியா தத்துவமாறு மொடுங்கு மென்பதனானும், சத்தி தத்துவத்தைச் சிவத்துளடக்கிச் சுத்த வித்தை யாதி மூன்றுஞ் சத்தி சிவத்துள் அடங்குமாறு கூறுத லானும், இவ்விரண்டுங் குடிலையி லொடுங்குமாறு கூறுத லானும் காண்க. ஈண்டுச் சுத்த வித்தையை வித்தை என்றது "வித்தைமுத லைவரால் விளங்கு ஞானம்" எனச் சிவப்பிரகாசத்தில் (39) வருமாற்றானுமுணர்க. இனி இரண்டிலுமூன்று மொடுங்கு என்றது சிவதத்துவம் ஞானமாயும் சத்திதத்துவங் கிரியையாயு மிருத்தலின்.

அவற்றின் சமனதையும் நியூனாதிக்கமுமே சதாசிவமும் ஈசுரமும், சுத்தவித்தையுமாகலின். அது முன் உதாகரித்த,

बिन्दुनादं द्विधा तत्वं कुटिलामध्ये लयोदितम् ।

என்பதனானும் விளங்கும். இவ்வாறு தத்துவத் தோற்றமும் ஒடுக்கமும் கூறியதனாலன்றே "தூலமாமுருவினுக்கு" (சித்தி. சுபக். 140.) என்பது பிரேர்ய பிரேரக பாவங் கூறியதெனினுமாம் என்றது. இனி ஞான சித்தியில்,

कुटिला कुण्डली बिन्दुरिच्छा ज्ञानक्रियोदितम् ।

என்பதனாற் சுத்தமாயை ஒன்றை மூன்றாகக் கூறியது, சிருஷ்டி காலத்தில் இச்சாதி, சிவசத்திகளால் உண்டாதலின், தானும் இச்சாதி மூன்றாய்ச் சமட்டி ரூபமாய்த் திரிகோணாகாரமாயிருத்தலின். அஃது அதனிற்றானே,

सृष्टिकाले त्रिबिन्द्वर्थं त्रिकोणाकारसम्भवम् ।
तन्नादादिधरण्यन्तं षट्त्रिंशत्तत्वरूपकम् ॥

என வருமாற்றான் உணர்க. ஈண்டு நாதம் என்றது குடிலையை. அது,

क्षित्यादिकुटिलान्तानि षट्त्रिंशत्तत्वरूपकम् ।

என்பதனால் உணர்க. குண்டலீ சத்த தத்துவம். அதிலேயே,

मूलाधारं चतुष्पत्रं तन्मध्ये वशषस्थजम् ।
तन्मध्ये कुटिलाकारं त्रिकोणाकारसम्भवम् ॥
नाडीमूला वृताङ्गा हि कुण्डली हंसनिस्वना ।
कुण्डल्याकारमध्यस्थे प्राणं प्रणवसम्भवम् ॥

எனவும்,

# சீகாழியில் திருமுறை மாநாடு.



சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற சித்திரைப்பெருவிழாவை முன்னிட்டு 30—4—52 திருமுலைப்பால் திருநாள்முதல் 5—5—52முடிய ஆறுநாட்களும் திருஞானசம்பந்தர் ஆலயத்தில் மாநாடு நடைபெற்றது. பெருநிலக்கிழார் இராவ்சாகிப் திரு, சீனுவாசமுதலியார் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார் கள். சீகாழிவட்டக் கல்விநிலையக் கண்காணிப்பாளர் திரு. ரத்தின சபாபதிப்பிள்ளை அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துத் திறப் புரை நிகழ்த்தினர்கள். முதல்நாள்அண்ணுமலைநகர் தமிழ்விரிவுரை யாளர் திரு. E. S. வரதராஜஐயர்அவர்கள் B. A. 'திருநெறியதமிழ்' என்பது பற்றியும், அம்பாசமுத்திரம் திருவாவடுதுறை யாதீனச் சமயப்பிரசாரகர் திரு. ஆ. முத்துக்குமாரசாமிபிள்ளை 'மறைவளரும் தமிழ்' என்பதுபற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். 1-5-52 அன்று திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால் திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L "அப்பர் திரு வுள்ளம்" பற்றியும், திருவாரூர் போர்டுஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. M. இரத்தினதேசிகர் அவர்கள் "அப்பர் அருள் மொழி" பற்றியும் பேசினர்கள். 2—5—52ல் "தம்பிரான்தோழர்" பற்றிச் சீகாழி திரு. அரங்காச்சாரியார் B. A. L. T அவர்களும், "சுந்தரர்செந்தமிழ்" பற்றிக் கோவை நிர்மலாகல்லூரித் தமிழ் விரி வுரையாளர் வித்வான், ஸ்ரீமதி. குழந்தையம்மாள் அவர்களும் விரி வுரை நிகழ்த்தினர்கள். 3—5—52 அன்று அண்ணுமலைநகர் தமிழ்த் துறை ஆராய்ச்சியாளர் வித்துவான், திரு. க. வெள்ளைவாரணம் அவர்கள் "வாசகம் கோவை" என்பதுபற்றிப் பேசினர். அடுத்து, சென்னை கலைமகள்ஆசிரியர் வாசீசகலாநிதி திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் M. A. "ஒன்பதாம்திருமுறை"யை விளக்கினர்கள். 4-5-52 அன்று திருமந்திரத்தின் சிறப்பினைத் திருவையாறு அரசர் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களும், பதினெராந் திருமுறையிலுள்ள பிரபந்தத்தில்காணும் சிறப்புக்களை மயிலை ஸ்ரீமதி K. S. காஞ்சனமாலையம்மையார் அவர் களும் எடுத்துமொழிந்தார்கள். மறுநாள் 5-5-52அன்று சேக்கிழா ரிடத்துக்காணும் தெய்வப்புலமைத்திறத்தையும், அவரது செய்யுள் நலன்களையும் லால்குடி பெருஞ்சொல் விளக்கனர் திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்களும், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் திரு. அ. ச ஞானசம்பந்தம் M. A. அவர்களும் நன்கு விளக்கிப் பேசினர்கள்.

ஒவ்வொருநாளும் தேவஸ்தானக்கட்டளைவிசாரணை வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள் அவர்கள் தேவஸ்தானச் சார்பில் வந்தனோபசாரம்கூறினர்கள். அன்பர்கள் ஒவ்வொருநாளும் பெருங்கூட்டமாக வந்திருந்து அறிஞர்களின் ஆராய்ச்சியுரைகளைக் கேட்டு இன்புற்றார்கள்.

கடைசிநாள் இரவு ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள், தேவஸ்தானத்தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவர்கள் மற்றும் இசைவாணர்கள் ஆகியோர் தக்கஇன்னிசைக் கருவிகளின் துணைகொண்டு திருமுறை ஓதிவரத் திருமுறை ஊர்வலம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

## ஆதீன தேவஸ்தானங்களில் சொற்பொழிவுகள்:

**திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்:-** 1—5—52ல் குத்தாலம் போர்டுஹைஸ்கூல் தமிழ் ஆசிரியர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்", திருவையாறு, வித்துவான், ஸ்ரீமதி S. கரும்படுசொல்லியம்மையாரவர்கள், "சைவப் பெண்மணிகள்" 2—5—52ல் அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவர் வித்துவான், திரு, ஜி, சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., B. L. "திருவளர் தாமரை", 5—5—52ல் ஸ்ரீரங்கம், தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, பாகவதர், பிர்மஸ்ரீ S. விஜயராகவாசாரியார் அவர்கள் & பார்ட்டி "சோமாசிமாற நாயனுர் கதாகாலக்ஷேபம்",

**திருவையாறுஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்:** 30—4—52ல் கரந்தை, கவியரசு. திரு, R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் "ஐயாற்றின் தெய்வச் சிறப்பு". திருவையாறு, வித்துவான். ஸ்ரீமதி S. கரும்படுசொல்லி அம்மையார் அவர்கள் "திருநாவுக்கரசு". 1—5—52ல் திருச்சி, திருவண்ணுமலை ஆதீன வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவாரவர்கள் (பொன்னையா உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்) "இறைபணி". 2—5—52ல் ஸ்ரீரங்கம், தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, பாகவதர், பிர்மஸ்ரீ S. விஜயராகவாசாரியார் அவர்கள் & பார்ட்டி "சுந்தரர் கதாகாலக்ஷேபம்".

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திரநாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல, இம்மாதத்திலும் 7—5—52 திருநல்லம் ஸ்ரீ உமாமகேஸ்வர சுவாமியின் ஆலயத்தில் அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப் பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—5—1952.